கோகுலம்

குழந்தைகள்
மாதமிருமுறை

1-10-1972

30 காசு



சங்கீதமே அவர் சரிதம், சர்வ சமர்ப்பணமே அச்சரிதம் !



தியாகராஜர் என்கிற ஆத்மாவினுள் கவி, பக்தர், இசைக் கலைஞர் என்ற மூவரும் பூரண இசைவு பெற்று உயிர் வாழ்ந்தனர். அவருள் இருந்த கவிஞர் அவரது க்ருதிகளில் காணும் உன்னத உணர்வினில் வெளிப்பட்டார். இக் கவிநயச் சிறப்பாலேயே அவரது உத்க்ருஷ்டமான கீர்த்தனங்கள் இருமடங்கு மகிமை பெற்றன.
ஆண்டவனை இசை மூலமே தியானித்தார் தியாகராஜர். பாடலிலேயே பரமபதத்துக்குப் பாதை கண்டார். வெற்று அறிவால் மட்டும் அவர் வெளியிட்ட ஆழ்ந்த கருத்துக்களைக் கிரகிக்க முடியாது. அவரவரும் தமக்குள் இலங்கும் சாந்த நிலையை எய்தவும், சுற்றியுள்ளோருடன் இசைந்த வாழ்வினை நடத்தவும் உரிய வழியை எதிர்காலத்துக்குக் காட்டினார் அவர்.

சாதி, சமயம், சமுதாயம், சம்பிரதாயம் என்கிற குறுகிய வேறுபாடுகளைக் கடந்து உயர்நிலையில் நிற்பவரே தியாகராஜர் போன்ற மகான்கள். அவர்கள் ஆண்டவன் படைத்த உயிரினங்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் ஆண்டவனுக்கே தொண்டு புரிவதற்கென உதித்தவர்கள்.

இந்த மகாத்ம லட்சணம் பாரெங்கும் பரவி நிற்பது...

மபத்லால் க்ரூப்

MAFATLAL GROUP




கோகுலம்

மலர் 1 :: இதழ் 12

அக்டோபர் 1, 1972

பரிதாபி, புரட்டாசி 15



சந்தா விவரம் :

தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம்	ரூ.	7-00
ஆறு மாதம்	ரூ.	3-50
இலங்கை	ரூ.	9-00
(இலங்கை நாணயப்படி)		
இதர நாடுகள்	ரூ.	18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்


-- பாரதியார்

□

ட்டைப்படப் பாம்பு :

நான் பரமசிவன் கழுத்திலேயே
இருந்தவனுக்கும் !
இந்தப் பையன் கழுத்திலே
இருக்கப் பயப்படுவேனா ?

வண்ணப்படம் : ஆர். ஹரிகோபால்



ஆத்திசூடி

ராஜாஜி



சுளிக்கச் சொல்லேல்

ஒருவனைத் திருத்த வேண்டியபோதும் கோபக் குறி கொண்ட பேச்சுக்களைப் பேச வேண்டாம். இனிய சொல்லால் ஒருவன் மனத்தைத் திருத்தலாம். கடுஞ் சொல்லால் திருத்துவது முடியாது. அதனால் பேசுவோனுக்கு தற்கால திருப்தியே தவிர ஒரு நன்மையும் பயக்காது.

சூது விரும்பேல்

சூதாட்டத்தில் விருப்பம் கொள்ளாதே. சூதாட்டங்கள் ஆட ஆரம்பித்தாயானால் கெட்டுப் போவாய். மறுபடி மறுபடி ஆட மனம் இழுக்கும். ஆகையால் அவ்வாட்டங்களில் மனம் செலுத்த வேண்டாம்.

செய்வன திருந்தச் செய்

செய்வன - நீ செய்ய வேண்டிய காரியங்களைத் திருந்தச் செய் - திருத்தமாகச் செய்.

கடன் தீர்த்தேன் என்பது போல் அரை குறையாக எதையும் செய்யாதே செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும். செவ்வையாக யாதொரு குறையுமின்றிச் செய்ய வேண்டும். எதைச் செய்தாலும் மறுபடி திருத்த வேண்டிய அவசியமில்லாமல் செய்வதற்கு முயல வேண்டும். இது சிறிய விஷயமாயினும், பெரிய விஷயமாயினும் எல்லாவற்றுக்கும் பொருந்தும்



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

ஒரு நாள் கிருஷ்ணர் ஒரு கோபிகை வீட்டில் சென்று வெண்ணெய் அருந்தும்போது பிடித்துக்கொண்டாள். ''பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பது போல் அகப்பட்டுக் கொண்டாயா?'' என்று சொல்லிக் கிருஷ்ணரைப் பிடித்து இழுத்து யசோதையிடம் வந்தாள். யசோதை மடியில் கிருஷ்ணர் அமர்ந்திருக்கக் கண்டாள். அவள் கையிலிருந்த கிருஷ்ணர் மாயமாய் மறைந்துவிட்டார். அவள் அதிசயம் அடைந்தாள்; திகைத்தாள். இவ்வாறு பலப் பல அற்புதங்களை நேரில் கண்டு வியந்தார்கள் கோபியர்.

சில சமயங்களில் அப்பெண்கள் கிருஷ்ணனைப் பிடித்து மத்தால் அடித்தார்கள். அந்த அடிகள் அனைவர் மீதும் பட்டன. அவர் எல்லா உயிர்களிலும் உறைகின்றவர் ஆதலால் அவரை அடித்த அடி அனைவர் மீதும் பட்டன.

கிருஷ்ணர் தெருவில் விளையாடும் போது பிள்ளைகளுக்கு மண்ணை வாரி வாரித் தந்தார். தாமும் மண்ணை வாயில் இட்டு உண்டார். கண்ணன் தன் திருக் கரத்தால் தந்த மண் சர்க்கரையாக இனித்தது.

இதனைக் கண்ட கோபிகைகள் யசோதையிடம் வந்து ''அம்மா! உன் மகன் செய்யும் இந்த அநியாயங்களை நீ கண்டிக்கக் கூடாதா? எங்கள் பிள்ளைகளுக்கு மண்ணைக் கொடுக்கின்றான். பிள்ளைகள் வயிறு கெட்டு விட்டது'' என்றனர்.

யசோதை கோபித்து, ''கிருஷ்ணா! அவர்களுக்கு மண்ணையா கொடுத்தாய்?'' என்று கேட்டாள்.

''அம்மா! அண்ணா தான் மண் தின்றான்.''

''பலராமா! நீ மண் தின்றாயா?''

''இல்லை; இல்லை! தம்பிதான் மண் தின்றான்.''

''கண்ணா! மண் தின்றாயா?''

''இல்லை!''

''வாயைக் காட்டு!''

வாசுதேவன் வாயைத் திறந்து காட்டினார். அந்த வாய்க்குள் பதினாலு உலகங்களும், ஏழு தீவுகளும், ஏழு கடல்களும், மேரு மலை முதலிய சகல மலைகளும், சூரிய, சந்திரன் முதலிய நவக்கிரகங்களும், அஷ்ட வசுக்கள், சப்த மருத்துக்கள், திசை பாலகர்கள், கின்னரர், கிம்புருடர், அசுரர், யட்சர்கள் முதலியோர்களும், மதுரையும், கோகுலமும் தன்னையும் கண்டாள். அதிசயம் கொண்டாள். அப்படியே மயங்கி விழுந்தாள். பின்பு தெளிவு பெற்று எழுந்தாள்.

மறுபடியும் மகனுடைய வாயைப் பார்த்தாள். பற்கள் மட்டுமே இருந்தன. ''நான் கண்டது கனவா? நான் தூங்கவில்லையே? கனவு என்று எப்படி நினைக்க முடியும்? இது ஏதோ மாய வித்தையா? பரம்பொருளே எனக்கு மகனாக, கண்ணனாக வந்தது போலும்! ஆஹா! என்ன அதிசயம்! பரம்பொருள் இவன். இவனை அடித்தேனே?'' என்று பலப் பல நினைத்தாள். மீளவும் விஷ்ணு மாயையால் கிருஷ்ணரைத் தன் குழந்தையாகவே எண்ணினாள்.

துரோணர் என்ற முனிவர் நந்த கோபனாகவும், வசுமதி என்ற தவமாது யசோதையாகவும் பிறந்தார்கள். முற்பிறப்பில் செய்த அளவற்ற தவத்தால் வேதங்களும், வேத கீதங்களும், கீத நாதங்களும் காணாத எம்பெருமானை அறுபது நாழிகையிலும் கண்டும் அவருடைய மழலை மொழிகளைக் கேட்டும், அப்பரம்பொருளைத் தொட்டும் வளர்க்கும் பெரும் பேறு பெற்றார்கள். அது மட்டுமா? உலகங்கட்கெல்லாம் மாதா பிதாவாகிய எம்பெருமான் அவர்களை 'அம்மா! அப்பா!' என்று அழைக்கும் பாக்கியமும் யோக்கியமும் பெற்றார்கள்.

(தொடரும்)



மந்திரச் சவுக்கு!

வாண்டு மாமா



ஒரு தேசத்தில் ஒரு ராஜா இருந்தான்... இதென்ன, 'ஒரு தேசத்துக்கு ஒரு ராஜா இல்லாமல் ஒன்பது ராஜாக்களா இருப்பார்கள் ?' என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதில் விழுகிறது. 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்று மார் தட்டிக்கொள்கிற இந்தக் காலமில்லை அது. எல்லாருக்குமாக ஒரே ஒரு ராஜா இருந்த காலம் அது. அந்த ராஜா நல்லவனாக இருக்கக் கூடாதா ? ரொம்பப் பொல்லாதவனாக இருந்து தொலைத்தான் ! சதா சண்டை சண்டை என்று அண்டை அயல்நாடுகளுடன் போரிட்டுக் கொண்டேயிருந்தான். போர் என்றால் பெரும் படை வேண்டாமா ? அது அவனிடம் இருந்தது. ஆனால் அவன் தன் போர்வீரர்களுக்குச் சரியாகவே சம்பளம் கருவதில்லை. ஆகவே படை வீரர்கள் வெறுப்போடுதான் போர்க்களத்துக்குப் போனார்கள். சம்பளம் தரவில்லை என்பதற்காகப் படையில் சேராமலோ போர்முனைக்குப் போகாமலோ இருக்கவும் கூடாது. நாட்டில் உள்ள வாலிபர்கள் அத்தனை பேரும் ராணுவத்தில் சேரத்தான் வேண்டும். இது கட்டாயம். மறுப்பவர்களுக்கு மரணம்தான் காத்திருக்கும்.

இந்த மோசமான ராஜாவின் படையில்தான் இருந்தார்கள் அந்த மூன்று வீரர்களும். எப்படியாவது படையிலிருந்து தப்பி ஓடிவிட வேண்டும் என்று திட்டமிட்டார்கள் மூவரும். காரணம், உழைப்புக்கேற்ற ஊதியமில்லாத ராணுவ வாழ்க்கை அவர்களுக்கு வெறுத்துப் போய் விட்டது.

''தப்பிச் செல்லும் நாம் பிடிபட்டால் தொலைந்தோம். அதன் பிறகு நம்மைத் தூக்கு மரம்தான் வரவேற்கும்'' என்றான் ஒருவன்.

''இப்படிப் பயந்தால் எப்படி? சுதந்திரம் சும்மாவா கிடைக்கும்? அதோ தெரிகிறதே அடர்ந்த வயல்வெளி, அதில் நாம் ஒளிந்து கொண்டால் யாராலும் கண்டுபிடிக்க முடியாது. ராஜாவின் ராணுவப் படை நாளைக்கு இங்கிருந்து கிளம்பி விடுகிறது. இதுவே நாம் தப்புவதற்குச் சரியான தருணம்'' என்றான் மற்றவன். ஆகவே மூவரும் அன்றிரவு படையணியிலிருந்து தப்பி வயல் வெளியில் பதுங்கிக் கொண்டார்கள் உயர்ந்து வளர்ந்திருந்த பயிர் அவர்

ளை நன்கு மறைத்துக் கொண்டது. னால் அவர்கள் எதிர்பார்த்தபடி டையணி இடம் பெயரவில்லை. அங் கேயே முகாமிட்டிருந்தது. பாவம், ரர்கள்! ஒரு நாள் இரண்டு நாட்க ாயின. பசியும் கொகவும் அவர்களை ாட்டி வதைத்தன. இனி வெளியே ரவும் முடியாது. வந்தால் ராஜாவின் ாணுவத்தை விட்டுத் தப்பி ஓடியதற் ாக மரண தண்டனை கிடைக்கும்.

''நாம் தப்பி ஓடிவந்து என்ன பயன்? ழந்த வயல்வெளியின் சகதியில் சாக வண்டியதுதான் போலிருக்கிறது'' ன்றான் ஒரு வீரன் வேதனையுடன். அப் பாது அவர்கள் தலைக்கு மேலே ஒரு ராகன் பறந்து போய்க் கொண் ருந்தது. 'டிராகன்' என்றால் தெரி மா? இறக்கை உடைய முதலையைப் போலிருக்கும். அதற்கு மந்திர தந்திர மெல்லாம் தெரியும். வீரர்களின் வேத னக் குரல் டிராகனின் காதில் விழுந்தது. உடனே அது அவர்கள் பதுங்கியிருந்த இடத்துக்கு அருகே வந்து இறங்கியது. வீரர்கள் முதலில் அதைக் கண்டு பயந் தாலும் பிறகு அதனிடம் தங்கள் நிலையைச் சொல்லி அழுதார்கள்.


''இவ்வளவுதானே?'' என்றது டிரா கன். ''உங்களை நான் காப்பாற்று கிறேன். ஆனால் எனக்கு நீங்கள் அடி மையாக வேண்டும். அதற்குச் சம் மதமா?'' என்று கேட்டது.

சாவதைவிட அடிமையாக வாழ்வதே தேவலாம் என்று பட்டது அந்த அசட் டுப் போர் வீரர்களுக்கு. 'ஆகட்டும்' என்று ஒப்புக் கொண்டார்கள். மூவரை யும் தனது கால்களால் தூக்கிக்கொண்டு பறந்த டிராகன் அவர்களை ராஜாவின் படை வீட்டிலிருந்து வெகு தூரத் துக்கு அப்பால் கொண்டு போய் விட்ட தும் ஓர் ஒப்பந்தப் பத்திரத்தை அவர் களிடம் நீட்டி, அதில் தன் நிபந்தனை களுக்கு ஒப்புக் கொண்டதாகக் கை யெழுத்துப் போடும்படி சொல்லியது. வேறு வழியின்றி அவர்களும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்தனர்.

டிராகன் அவர்களிடம் ஒரு சாட்டை யைக் கொடுத்து ''இதை நீங்கள் சொடுக்கினால் உங்களுக்குத் தேவை யான பணம் வந்து கொட்டும். அதைக் கொண்டு நீங்கள் உங்கள் விருப்பப்படி உயர்ந்த உல்லாச வாழ்க்கை வாழலாம். ஆனால் இப்படி ஏழாண்டுகள் வாழ்ந்த பிறகு என்னிடம் நீங்கள் திரும்பி வர வேண்டும். அதன்படி நீங்கள் மூவரும் என் உடைமை. உங்களுக்கு உங்கள் சுதந்திரம் தேவையானால் அப்போது நான் கேட்கும் விடுகதைகளுக்கு விடை யளிக்க வேண்டும்'' என்றது.

மூன்று போர்வீரர்களும் ஏழு வருஷ இன்ப வாழ்க்கையை நினைத்து அதற்கு இணங்கினார்கள். டிராகன் மந்திரச் சவுக்கைக் கொடுத்து விட்டு மறைந்தது.

வீரர்கள் 'சொடீர்' என்று சொடுக்கினார்கள். பூமியிலி ருந்து ஊற்றாகப் பணம் வந்து கொட்டியது. அப்பப்பா! எத் தனை செல்வம்! அத்தனை பணத்தை அவர்கள் அதுவரை பார்த்ததே யில்லை. அதன் பிறகு கேட் கவா வேண்டும்? நல்ல நல்ல உடைகளை வாங்கினார்கள்.



அரண்மனை கட்டிக் கொண்டார்கள். ஆடம்பரமாக வாழ்ந்தார்கள். மன்னரைவிட மகிமையாக வாழ்ந்த அவர்களுக்கு வருடங்கள் உருண்டதே தெரியவில்லை. ஒரு நாள் தங்கள் சுக வாழ்வின் இறுதி நெருங்கி விட்டதை உணர்ந்தனர் இருவர். கவலை அவர்களைக் கலக்கலாயிற்று. ஆனால் மூன்றாமவன் தைரியசாலி. "ஏனப்பா வேதனைப்படுகின்றீர்கள்? நாம் என்ன நேற்றுத்தான் பிறந்தோமா? பச்சைக் குழந்தைகளா? டிராகன் போடும் விடுகதைகளுக்கு விடை தெரியாமலா போகும்?" என்று தைரியம் சொன்னான்.

ஒரு நாள் மூவரும் கவலையோடு கானகத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது அந்தப் பக்கமாக ஒரு பாட்டி போனாள். இவர்களின் உயர்ந்த உடையையும் ஆனால் சோர்ந்த முகத்தையும் கண்ட அந்தப் பாட்டி அவர்களின் வேதனைக்குக் காரணம் கேட்டாள். மூன்று போர் வீரர்களும் தாங்கள் ஒரு கொடிய மிருகத்துக்கு அடிமையான கதையை அழமாட்டாத குறையாகக் கூறினார்கள். "ஏழு வருஷங்களும் ஓடி விட்டன. இனி அதற்கு நாங்கள் உணவாக வேண்டும் அல்லது அது கேட்கும் கேள்விக்கு விடை கூற வேண்டும். என்ன கேட்குமோ? எப்படி எங்களால் விடை கூற முடியப் போகிறதோ?" என்று மூக்கைச் சிந்தினார்கள் மூன்று வீரர்களும்.

பாட்டி சொன்னாள்: "உங்களில் யாராவது ஒருவர் அதோ தெரிகிறதே அடர்ந்த கானகம் அதற்குள் போனால் அதன் நடுவே இடிந்து சரிந்த ஒரு பாழடைந்த அரண்மனை இருக்கும். அதுதான் நீங்கள் கூறும் அந்தப் பறக்கும் பயங்கர மிருகமான டிராகன் தங்கியுள்ள இடம். அங்கு போனால் உங்களுக்கு உதவி கிடைக்கும்."

பயந்தாங்குளிகளான இருவர் "இந்தக் கிழவியின் யோசனை நம்மைக் காப்பாற்றப் போவதில்லை" என்று அங்கேயே உட்கார்ந்திருந்தார்கள். மூன்றாமவன் பாட்டியின் வார்த்தையை மதித்துக் கானகத்தினுள் புகுந்து, பாழடைந்த கட்டிடத்தைத் தேடிப் போனான். உள்ளே போனால் அங்கும் ஒரு பாட்டி ரொம்ப ரொம்ப வயதான பாட்டி உட்கார்ந்திருந்தாள். அவள் அந்த மிருகத்தின் சொந்தப் பாட்டிதான். உள்ளே வந்தவனை அந்தப் பாட்டி அன்போடு வரவேற்று உபசரித்தாள். அவனும் தன் கதையைக் கூறித் தங்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். கொடிய மிருகத்தின் பாட்டியானாலும் அவளுக்குக் கருணை மனசு. ஆகவே அவனுக்கு உதவுவதாகக் கூறி ஒரு மறைவிடத்தைக் காட்டி அங்கு ஒளிந்து கொண்டு, அந்த டிராகனோடு தான் பேசுவதைக் கவனமாகக் கேட்கும்படி கூறினாள். பாட்டி கூறியபடி தரையிலிருந்த ஒரு பெரிய கற்பலகையைத் தூக்கி அதனடியில் போய் ஒளிந்து கொண்டான் வீரன்.

நள்ளிரவில் டிராகன் வந்தது. பசியோடிருந்த அதற்கு உணவு பரிமாறினாள் பாட்டி. டிராகன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே பேச்சுக் கொடுத்தாள். "இன்று எத்தனை ஆத்மாக்களை உனக்கு அடிமையாக்கிக் கொண்டாய்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை. கொஞ்ச நாட்களாகவே எனக்கு எந்த ஆத்மாவும் அடிமையாகவில்லை. ஆனால் விரைவிலேயே மூன்று போர்வீரர்கள் என்வசப் படுவார்கள்" என்றது டிராகன்.

"மூன்று போர் வீரர்களா? ஆச்சரியமாக இருக்கிறதே! உன்னிடமிருந்து தப்பித்துப் போக முடியவில்லையா அவர்களால்?"

"எப்படி முடியும்? ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறார்களாக்கும். நான் போடும் கேள்விக்கு அவர்களால் பதில் சொல்ல முடியப்போவதில்லை. அம்மூவரையும் நான் அடையத்தான் போகிறேன்."

"அப்படி என்ன அதிசயமான பதில் சொல்ல முடியாத கேள்விகள்?"

"அதுவா? அவர்களுக்கு ஒப்பந்தப்படி ஏழாண்டுகள் முடிந்ததும் ஒரு விருந்து கொடுக்கப் போகிறேன். அதில் அவர்களுக்குப் பரிமாறப்படுவது என்ன உணவு தெரியுமா? வடக்குக் கடற்கரையில் ஒரு கடற் பூனை செத்துக் கிடக்கிறது. அதன் இறைச்சிதான். அது வைத்துள்ள வெள்ளித் தட்டு திமிங்கிலத்தின் விலா எலும்பிலிருந்து செய்தது. நீர் அருந்தும் குவளையோ ஓர் இறந்த குதிரையின் குளம்பிலிருந்து ஆக்கியது. இவை அவர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது? எங்கே சொல்லப் போகிறார்கள்?" என்று சாப்பிட்டுக் கொட்டாவி விட்டுக் கொண்டே படுக்கப் போய் விட்டது அந்த ராட்சத மிருகம்.

அது போனதும் பாட்டி கல்லை நகர்த்தி வீரனை வெளியேற்றினாள். அவனும் பாட்டிக்கு நன்றி கூறிவிட்டுத் தன் நண்பர்களைத் தேடி வேறு வழியாக வெளியேறினான். நண்பனிடமிருந்து நடந்ததைக் கேட்ட மற்ற இருவருக்கும் மகிழ்ச்சியான மகிழ்ச்சி.

சவுக்கைச் சொடுக்கினார்கள். பணமாகக் கொட்டிற்று. பெரிய விருந்தாகச் சாப்பிட்டார்கள்.

ஏழாவதாண்டு முடிந்த மறுநாள் டிராகன் ஒப்பந்தப் பத்திரத்துடன் அவர்கள் முன்னால் தோன்றியது. ''என்ன சௌக்கியமா? சுகமாக வாழ்ந்து கொழுத்துப் போயிருக்கிறீர்கள்., நல்ல உணவுதான் எனக்கு.காத்திருக்கிறேன்'' என்றது மிருகம். பிறகு, ''உங்களுக்கு என் அரண்மனையில் ஒரு விருந்து வைக்கப் போகிறேன். அதில் உங்களுக்குப் பரிமாறப்படும் சுவைமிக்க உணவு எதிலிருந்து தயாரித்தது என்பதைக் கூறினால் உங்களுக்கு விடுதலை'' என்றது அசட்டு டிராகன். அதற்குத் தெரியுமா தான் அசடாக்கப்பட்டது?


''அதென்ன பிரமாதம்? வடக்குக் கடலில் செத்துக் கிடக்கும் கடல் பூனையின் இறைச்சியிலிருந்து தயாரித்திருக்கப் போகிறாய்'' என்றான் ஒட்டுக் கேட்ட போர் வீரன். டிராகனுக்கு மூச்சு முட்டிற்று. 'அட பாவிகளா?' என்று வியந்து போய், ''அது சரி, அது வைத்துப் பரிமாறப்படும் தட்டு எதனால் ஆனது? தெரியுமோ?'' என்று கேட்டது.

''திமிங்கிலத்தின் விலா எலும்பிலிருந்து தயாரித்திருப்பாய்!'' என்றானே பார்க்கலாம் இரண்டாமவன். டிராகனுக்கு முகம் செத்து விட்டது. தோல்வியும் ஏமாற்றமும் அதன் மூச்சிலிருந்து தீக்கொழுந்துகளாக வெளிப்பட்டன. ''போகட்டும், உங்களுக்கு நீர் அருந்தக் கொடுக்கப் போகும் குவளை?'' என்று அது முடிப்பதற்குள்ளேயே மூன்றாவது வீரன், ''குதிரையின் கால் குளம்பிலிருந்து செய்து வைத்திருப்பாய்'' என்றானே பார்க்கலாம். அவ்வளவு தான். அந்த ராட்சத மிருகத்துக்கு அவர்கள் மீதிருந்த ஆதிக்கம் நழுவியது. ஏதும் செய்ய முடியாத நிலையில் பேசாமல் மறைந்து போயிற்று. மூன்று போர் வீரர்களிடமும் மந்திரச் சவுக்கு தங்கிவிட்டது. அடிக்கடி அதைச் சொடுக்கிக் கொண்டு அவர்கள் ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்கள்.


'' இப்படி நேரா வந்து லெஃப்டிலே திரும்பி....''

புகைப்படம்

பி. நாராயணன்



தையல் மிஷினின் தந்தை



தொழில் புரட்சி யுகத்தில், புதுமையான யந்திரங்கள் காண மனிதன் எவ்வளவு தீவிரமாக இருந்தானோ, அதே போல் மக்களும் அதை எதிர்த்துப் புரட்சி செய்தார்கள். தாங்கள் உழைத்து ஊதியம் பெறுவதற்கு ஊறு விளைவிக்கவே யந்திரங்கள் தோன்றுவதாகப் பயந்தார்கள் மக்கள்.

ஆடைகளை இன்று அழகாகத் தைக்கத் தையல் யந்திரம் இருக்கிறது. ஒரே சமயத்தில் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு யந்திரங்கள் மூலம் உடைகள் தைத்துக் கொடுத்துவிடலாம் இப்போது. ஆனால் இந்தத் தையல் யந்திரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பாக? மனிதன் தனக்கு வேண்டிய ஆடைகளைக் கையாலேயேதான் தைத்துக் கொண்டான். தனிமனிதன் செய்யும் இந்தக் காரியத்தை யந்திரத்தினால் செய்ய முடியுமா என்று ஆராய்வதில் மனிதன் தீவிரமாகக் கவனம் செலுத்தலானான்.

முதல் தையல் யந்திரத்தை உருவாக்கி வெற்றிகரமாக இயக்கியவர் ஓர் ஏழை பிரஞ்சு தையற்காரர். இவர் பெயர் **பார்த்தலெமி திம்மோனீர்.** இவர் யந்திரம் கண்டுபிடித்த ஆண்டு 1830. ஆனால் தையல் யந்திரத்தினால் புகழும் பொருளும் வாழ்வும் பெற்றவர்கள் வேறு பலர்.

திம்மோனீருக்கு இருபது வயதான போது துணிகளை இணைத்துத் தைப்பதிலுள்ள கஷ்டங்களை அனுபவித்து அ வெறுத்தவர். கையால் செய்யும் இந்த காரியங்களை நிறைவேற்ற ஒரு யந்திர தைக் கண்டுபிடிக்க முடியுமா என் யோசிக்கலானார். ஆண் தையற்கார களைவிடப் பெண் தையற்காரர்கள் வே மாகத் தைத்தார்கள். அவர்களி பொறுமையையும் விரல்களின் லாக மான ஓட்டத்தையும் கண்டு வியந்தா திம்மோனீர். பெண்கள் வேகமாக கையால் தைக்கும்போது நேரத்தை கணக்கிடவோ என்னவோ அவர்களி கால்கள் தரையை உதைத்தவண்ண இருக்கும். இந்தச் செய்கையே திம்மோ னீரின் தையல் யந்திரத்துக்குக் க வாக அமைந்தது. உழைக்கும் அந்த பெண்களுக்காக வேலை செய்யக்கூடி ஒரு யந்திரத்தை உருவாக்குவதென் உறுதி பூண்டார் திம்மோனீர்.

அன்று முதல் அவர் தமது தொழி நேரங்களிலெல்லாம் அப்படி ஒரு ய திரத்தை உருவாக்குவதிலேயே செல டார். 1830ல் அவர் உழைப்புக் உருவம் ஏற்பட்டது. இவருடைய கண் பிடிப்பின் முக்கிய அம்சம், இவர் பய படுத்திய ஊசி முனை மேல் நோக் வளைந்ததாக இருந்தது. காலால் இய கும் பெடல் ஒன்று. மேலும் கீழு போகக்கூடிய ஓர் அமைப்பு அது. இ ஒருமுறை இயங்கும்போது துணியில் ஒரு தையலைப் போட்டது. திம்மோ னீரின் இந்த யந்திரம் பார்வைக்கு அழ கற்றதாகப் பக்குவப்படாததாக இரு தாலும் சரியான பாதையிலேயே அவர் அதை அமைத்திருந்தார். திம்மோனீர் வகுத்த வழியில் தான் பின்னால் தோன் றிய மாதிரிகள் உருவாக்கப்பட்டன.

ஆனால் திம்மோனீரை மக்கள் அப் போது ஓர் அரைப் பைத்தியம் என்று எண்ணி அலட்சியமாகப் பார்த்தார்கள். செயிண்ட் எட்டினியிலிருந்த ஓர் எஞ்சினீயரின் உதவியால் தம் கண்டு பிடிப்பை 'பேடண்ட்' செய்து கொண் டார் திம்மோனீர்.

இந்த ஏழைத் தையற்காரரின் அடுத்த இலக்கு—ஆசை—பாரிஸ் நகரத் துக்குப் போய் அங்கு தம் கண்டுபிடிப் பைப் பிரபலப்படுத்த வேண்டும் என் பது. ஊக்கமும் உழைப்பும் மிகுந்த திம்மோனீர் பாரிஸ் நகருக்குப் போய் ஓர் இடத்தைப் பிடித்து அதில் தம் தையல்யந்திரங்களைத் தயாரித்து நிறுவி, தையல் வேலைகளை ஏற்றுக் கொண்டு முடித்துக் கொடுக்கலானார். மெள்ள மெள்ளத் தொழில் சூடு பிடிக்கலா யிற்று. இருபது 'டைலர்கள்' திம்மோ னீரின் சிறிய தொழிற்சாலையில் இருபது

யந்திரங்களின் பெடலை அழுத்தித் தைத்துத் தள்ளவானார்கள். ஏழையின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை கனவாகும்படியான சம்பவம் நிகழ்ந்து விட்டது. பாரிஸ் நகரக் கைதையற்காரர்கள் தங்களுக்குப் போட்டியாக எங்கிருந்தோ வந்த ஒருவர் யந்திரங்களைக் கொண்டு தொழில் செய்வதை வெறுத்தார்கள். முதலில் திம்மோனீரின் யந்திரத்தை, 'அது ஒரு தமாஷ்' என்று நினைத்தவர்களுக்கு நாளடைவில் அது தங்கள் தொழிலுக்கு ஒரு சவாலாக அமைந்து விட்டதைக் கண்டு ஆத்திரம் உண்டாயிற்று. ஒரு நாள் பாரிஸ் நகரத்துக் கைத் தையற்காரர்கள் ஒன்று திரண்டு திம்மோனீரின் தொழிற் சாலைக்குள் வெள்ளமாகப் புகுந்தார்கள். அப்போது திம்மோனீர் ராணுவ உடை தயாரிப்புக்கான ஒப்பந்தம் ஒன்றை ஏற்றிருந்தார். அதற்கான வேலையை எண்பது யந்திரங்கள் சீராகச் செயல்படுத்திக் கொண்டிருந்தன. ஆத்திரங் கொண்ட கைவேலைக்காரர்களுக்கு இந்தக் காட்சி போதாதா? ஒவ்வொரு யந்திரமாகத் தூக்கித் தரையில் அடித்து நொறுக்கி உடைத்து அழித்தார்கள். தொழிற்சாலை நாசமாகியது. அதன் முதலாளியான ஏழைத் திம்மோனீருக்கோ பலத்த காயம் ஏற்பட்டது.



தொழில் பாழாகியது. பொருளும் போயிற்று. பாவம், திம்மோனீர்! வெறி கொண்ட கூட்டத்துக்கு முன்னே அவர் தம் தோல்வியை ஒப்புக்கொண்டு நடுத் தெருவில் நின்றார். தம்முடைய கண்டுபிடிப்பான எஞ்சிய ஒரு யந்திரத்தைக் கமுக்கட்டில் இடுக்கியபடி, தள்ளாடியவராகத் திம்மோனீர் பாரிஸ் நகர வீதிகளில் தையல் வேலை தேடி அலைந்தார். ஆனால் பாரிஸ் நகர உடை தயாரிக்கும் ஸ்தாபனங்கள் வழி வழியாக வரும் புராதன முறையை மாற்றி அமைக்கும் இந்தப் புரட்சியாளரோடு எவ்வித தொடர்பும் கொள்ள விரும்பவில்லை. ஆகவே வேறு வழியின்றி இவர் தம் சொந்த ஊரான செயின்ட் எட்டினிக்கே திரும்பினார்.

ஊர் திரும்பியவர் மனம் உடைந்து முடங்கிப் போய் விடவில்லை. ஒரு நிமிஷத்தில் முந்நூறு தையல்களைப் போடும் விதத்தில் தம் யந்திரத்தில் பல அபிவிருத்திகளைச் செய்தார்.

இந்த நிலையில், தம் சொந்த நாட்டில் தான் தமக்கு மதிப்பில்லை, அண்டை நாட்டிலாவது போய் இதைப் பணமாக்கலாம் என்று லண்டனுக்குப் போனார். பிரிட்டனில் தம் யந்திரத்தின் 'பேடண்ட்' உரிமையை விற்றார். இதனால் இவருக்குக் கிடைத்த பொருள் அந்த நாட்டிலேயே தங்கி வாழப் போதுமானதாக இல்லை. ஆகவே தம் கூடவே வாழும் வறுமையோடு இங்கிலாந்தில் இருந்து வாடுவதைவிட பிரான்ஸில் வாழ்வதே மேல் என்று தாய்நாட்டுக்கே திரும்பினார். தம் பாக்கி நாட்களை வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தபடி வாழ்ந்த பார்த்தலெமி திம்மோனீர் 1857ல் காலமானார்.

பழைமை விரும்பிகளின் இடையே புதுமை காணப் புகுந்தவர்கள் அடைந்த துன்பங்களுக்கு உதாரணமாக விளங்குபவர் திம்மோனீர்.

தையல் யந்திரம் வளர்ந்த கதையை அடுத்த இதழில் பார்க்கலாம்.

டால்கம் பவுடர்

உஷா உதட்டைப் பிதுக்கி அழுவதற்கு ஆயத்தம் செய்தாள். காரணம்? அவள் தோழி வீட்டுக் கல்யாண அழைப்புக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். சிங்காரச் சாதனங்களில் முக்கியமான பவுடர் டப்பா காலியாக இருந்தால் அவள் அழமாட்டாளா பின்னே? டால்கம் பவுடர் என்று நாம் அழைக்கும் அது சிங்காரச் சாதனம் மட்டும் அல்ல. பல உபயோகமான பணிகளுக்குப் பயன்படக் கூடிய ஒரு தாதுப் பொருள் அது என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கிறதில்லையா? ஆனால் அது உண்மை.

'டால்க்' என்பது வழுவழுப்பான ஒளி ஊடுருவக்கூடிய ஒரு தாதுப் பொருள். மனிதன் கண்டுபிடித்துள்ள தாதுப் பொருள்களிலேயே மிகவும் மிருதுவானது இந்த 'டால்க்'தான். நகத்தினால் சுலபமாகக் கீறி எடுக்கலாம் இதை. மக்னீசியத்தின் மிக நுண்ணிய துகள்களோடு கலந்து வாசனையும் இன்னும் சில ரசாயனப் பொருள்களும் சேர்த்து டால்கம் பௌடர் தயாரிக்கப்படுகிறது. 'டால்க்' என்னும் இந்தத் தாதுப் பொருள் வெள்ளி வெளுப்பாகவோ இளம் பசுமையாகவோ கிடைக்கிறது. டால்க் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும்போது நாம் காண்பது போலப் 'பவுடர்' நிலையில் இருக்காது. பாறைகளாகவே இருக்கும். இதற்கு 'சோப் ஸ்டோன்' என்றும் ஒரு பெயர். அநேகமாக இது சாம்பல் நிறமாக அல்லது வெண் பசுமை கலந்ததாக இருக்கும். தொட்டுப் பார்த்தால் வழுவழுப்பாகவும் மிருதுவாகவும் இருக்கும். அதனாலேயே இதற்கு 'சோப்புக் கல்' என்று பெயரிட்டார்கள் போலும். இந்தத் தாதுப் பொருளில் செம்பழுப்புப் புள்ளிகளும் காணப்படும்.

'டால்க்'கில் மிக உயர் ரகம் இத்தாலி நாட்டில் கிடைக்கிறது. இங்கிலாந்து, கானடா, ஜெர்மனி, ரொமேனியா ஆகிய இடங்களிலும் 'டால்க்' படிவங்கள் இருக்கின்றன. ஐக்கிய அமெரிக்காவில், முக்கியமாக அட்லாண்டிக்கடற்கரை நாடுகளில், உலகில் கிடைக்கும் 'டால்க்' தாதுக்களில் பெரும் பகுதி கிடைக்கிறது.


சாதாரண உஷ்ணத்தை இது தாங்கித் தடுக்கும் சக்தி கொண்டது. சுலபமாக இதைப் பல்வேறு அமைப்புகளுக்கு உருவாக்க முடியும். ஆகவே இதை வீட்டுக் காரியங்களுக்கான பாத்திரங்கள் செய்யப் பயன்படுத்துகிறார்கள். இதனால் இதற்கு 'பாட் ஸ்டோன்'—(பானைக் கல்) என்றும்கூட ஒரு பெயர். சமையல் பாத்திரங்கள், ஸ்டவ்வின் சில பாகங்கள் இந்த டால்க்கினால் செய்யப்படுகின்றன. சலவைத் தொட்டிகள், பாத்திரம் கழுவும் தொட்டிகள் (சிங்க்) ஆகியவை சோப்புக் கல்லான 'டால்க்'கிலிருந்து செய்யப்படுகின்றன.

சோப் ஸ்டோன் உயர்ந்த உஷ்ண நிலையில் மிக உறுதியானதாகிறது. ஆகவே, கொதிகலன்களின் உட்புறப் பூச்சாக இதைப் பயன்படுத்துகிறார்கள். ரஸாயனச் சாலைகளில் சோப் ஸ்டோன் பலகைகளால் ஆன அமிலத் தொட்டிகளை அமைக்கிறார்கள். காரணம் அமிலத்தின் வீர்யம் இதைப் பாதிப்பதில்லை. மின்சாரம் இதில் வேகமாகப் பாய்வதில்லை. இதனால் ஸ்விட்ச் போர்டுகளின் அடித்தளமாகவும் இன்ஸுலேஷனாகவும் இந்தத் தாதுக்களைப் பயன்படுத்துகிறார்கள்.


பண்டைக் காலத்து மக்கள் இந்தத் தாதுப் பொருள்களைக் கொண்டு சமைக்கும் பாத்திரங்கள் தயாரித்துக் கொண்டார்கள். புராதன எகிப்தியர்கள் இதில் தாயத்துக்களும் . ரட்சைகளும் தயாரித்து அதில் வண்ணங்களைப் பூசிப் பளபளப்பாக்கினார்கள்.

''ஆகக்கூடி நாம் பூசிக் கொள்ளும் வாசனை மாவு ஒருவிதக் களிமண்தான் இல்லையா ? வெள்ளைக் களிமண்—அப்படித்தானே?'' என்று கேட்டான் கிட்டு. எப்போதுமே அவன் அக்கா பூசும் முகப் பவுடரைப்பற்றி ஓர் இளப்பம் அவனுக்கு.

மேற்கத்திய நாடுகளில் தயாராகும் 'டால்க்'கில் முக்கால் பாகம் வர்ணங்கள், பளபளப்பான ஓடுகள், மண் பாண்டங்கள், கூரைப் பொருள்கள், காகிதம், ரப்பர் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்குப் போகிறது. கமகமக்கும் முகப் பவுடரான 'டால்க்' எத்தனை உபயோகமான உயர்ந்த தாதுப் பொருள் என்று தெரிந்து கொண்டீர்களா?



— வாசுகி



ஐந்து வகை வீடு – இதை ஆடிப் பார்த்துவிடு!

இந்த விளையாட்டை விளையாடுவதற்கு, ஆங்கில பாஷையில் நல்ல தேர்ச்சி வேண்டும். கான்வெண்டில் படிக்கும் குழந்தைகள், ஆங்கில மீடியத்தில் படிக்கும் குழந்தைகளுக்கு இது சுலபமாகவும் சுவையாகவும் இருக்கும். முயற்சியும் ஆர்வமும் இருக்குமானால் எல்லாருமே விளையாடி மகிழலாம். மேலேயுள்ள வட்டப் படத்தின் நடு மையத்தில் ஒரு குண்டூசியைக் குத்தி நிற்க வையுங்கள். ஒரு சேஃப்டிப் பின்னுடைய வளையப் பகுதியை அந்தக் குண்டூசிக்குள் நுழைத்து மாட்டுங்கள்.

முதலில் ஒருவர் இந்த சேஃப்டிப் பின்னைச் சுண்டிச் சுழலச் செய்யவும். அது சுழன்று நிற்கும் பகுதி குறிக்கும் இடத்தை நினைவு வைத்துக் கொள்ளவும். அதே நபர் மறுபடியும் பின்னைச் சுண்டிச் சுழலச் செய்யட்டும். இப்போது அது நிற்கும் பகுதியில் எந்த எழுத்தைச் சுட்டிக் காட்டுகிறதோ அந்த முதலெழுத்தாகக் கொண்ட, முதலில் பின் குறித்த பகுதியின் இனத்தில் ஒரு பெயரைச் சொல்ல வேண்டும். உதாரணமாக முதலில் பறவைகள் என்று குறிப்பிட்ட கட்டத்தில் பின் நிற்கிறதாகக் கொள்வோம். இரண்டாவது சுழற்சியின் முடிவில் பின் 'W' என்ற எழுத்தைச் சுட்டிக் காட்டியபடி நிற்கிறதாகக் கொண்டால் பறவை இனத்தில் 'W' எழுத்தை முதலாகக் கொண்ட ஒரு பறவையின் பெயரைச் சொல்ல வேண்டும். உதாரணமாக— Woodpecker.

இனி அடுத்த ஆட்டக்காரர் இதே முறையில் தொடர வேண்டும். ஓர் இனத்தில் ஒருவர் கூறிய பெயரை மறுபடியும் யாரும் கூறக்கூடாது. சேஃப்டி பின், கோடுகளின்மீது நிற்குமானால் ஆட்டக்காரரின் விருப்பம்போல இடது – வலது பக்கத்து எழுத்தையோ இனத்தையோ தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஓர் ஆட்டக்காரரால் அந்த இனத்தில் அந்த எழுத்தில் ஒரு பெயரைச் சொல்ல முடியாவிட்டால் எதிராளிக்கு ஒரு 'பாயிண்ட்' போய்ச் சேர்ந்து விடும். இப்படி மூன்று பாயிண்ட்களை ஒருவர் இழக்க நேருமானால் அவர் விளையாட்டி லிருந்து விலகிக் கொண்டு வேறு நபருக்கு இடமளிக்க வேண்டும். யார் இப்படிப் பலபேர்களை விளையாடும் உரிமை இழக்கச் செய்கிறார்களோ அவர்களே சாம்பியன் பட்டத்தை அடைவார்கள்.

இப்படிக் கொஞ்ச நேரம் விளையாடிய பின் வட்டத்தில் உள்ள ஐந்து வீடுகளின் தன்மையை மாற்றிக் கொள்ளலாம். மிருகங்கள் பறவைகள், நகரங்கள், பழங்கள், பூக்களுக்குப் பதில் வேறு அம்சங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு விளையாட்டைத் தொடரலாம். இந்த விளையாட்டினால் ஆங்கில அறிவும் சிந்திக்கும் திறனும் வளரும். தமிழிலும் இதே மாதிரி விளையாடலாம். — வாண்டு



சுண்டு குண்டு சீமாத்தாத்தா

சாமா

'நளவிலாஸ்' ஆரம்ப விழா அமர்க்களப்பட்டது. ஊரெல்லாம் அந்தப் புதிய ஹோட்டலைப் பற்றியும் அதன் சுவையான சாப்பாட்டைப் பற்றியும் தான் பேச்சாக இருந்தது. சுண்டுவும் குண்டுவும் தங்கள் தாத்தாவிடம் நளவிலாஸின் நளபாகத்தையும், நெய் மணக்கும் சமையலையும், நாக்கில் நீர்சுரக்க அவர்களுடைய நண்பர்கள் கூறிய தகவல்களை வைத்துக்கொண்டு அவற்றுக்குக் காது மூக்கு வைத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

''பசங்களா, ஏண்டா இப்படித் தவிக்கிறீங்க? நாளைக்கு உங்களை அங்கு சாப்பிட அழைத்துப் போகிறேன், போதுமா? ஆனால் ஒரு கண்டிஷன்....'' என்று 'சஸ்பென்ஸை' உருவாக்கினார் சீமாத் தாத்தா.

சுண்டுவுக்கும் குண்டுவுக்கும் நளவிலாஸில் நாளைக்கு நமக்குச் சாப்பாடு என்ற செய்தியே தேனாக இனித்தது. ''எந்த நிபந்தனையானாலும் தயார்'' என்றார்கள்.

''பெரிதாக ஒன்றுமில்லை. நளவிலாஸில் ஒரு சாப்பாடு பத்து ரூபாய். ஆகவே, அங்கு அரைப் பசியோடு போகக் கூடாது. காலையில் எதுவும் சாப்பிடாமல் வயிற்றைக் காயப் போட்டுக் கொண்டு போனால்தான் கொடுத்த பணத்துக்கு வஞ்சனை இல்லாமல் சாப்பிட முடியும். ஆகவே.....'' என்ற தாத்தா தம் திட்டத்தை விளக்கினார். சுண்டுவும் குண்டுவும் மறு நாள் எதுவும் சாப்பிடாமல்—நொறுக்குத் தீனி கூடாது — பத்து மணி வரை காத்திருக்க வேண்டும். பத்து மணிக்கு மேல் தாத்தா வந்து அவர்களை நளவிலாஸுக்கு அழைத்துப் போவார். சுண்டுவும் குண்டுவும் உடன்பட்டனர். அவர்களின் சகிப்புத் தன்மையைச் சோதிக்கவே இந்த ஏற்பாடு!


காலையில் சீமாத் தாத்தாவுக்கு வேலை இருந்ததால் வெளியே கிளம்பினார். ''பயல்களா, இப்படி வாருங்கள்'' என்று கூப்பிட்டு இருவருடைய ஆள்காட்டி விரலிலும் ஒரு கயிற்றைக் கட்டி, ''நாக்கும் வாயும் வயிறும் துருதுருக்கும்போது நிபந்தனையை இந்தக் கயிறு நினைவுபடுத்தும். எதையும் சாப்பிடக் கூடாதென்று. கரெக்டா நான் பத்து மணிக்கு வருவேன். தயாராக இருங்கள்'' என்று கிளம்பிப் போய்விட்டார் தாத்தா.


அரை மணி, முக்கால் மணியில் சுண்டுவுக்கும் குண்டுவுக்கும் வயிற்றைக் குடையலாயிற்று. சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்ற நினைவே அதிகப் பசியை உண்டாக்கிற்று. அதற்கு ஏற்றாற்போல் வீதியில் வறுகடலையும் இன்னும் பலவும் விற்றுக் கொண்டு போனார்கள். கஞ்சன் கந்தசாமி இன்றைக்கென்று நெய் முறுக்கை எடுத்து வந்து இவர்களுக்கு உபசாரம் செய்தான், தின்னும்படி. ''ம்ஹூம்! பேசப்படாது'' என்றார்கள் விரலில் கட்டியிருந்த கயிற்றைப் பார்த்துக் கொண்டே. சாதாரண நாட்களில் கெஞ்சு கெஞ்சென்று கெஞ்சினாலும் கூடக் கடலை உருண்டையில் 'காக்காய்'க் கடி கடித்துக்கூடக் கொடுக்க மாட்டான் ஒரு துண்டு. அப்படிப்பட்ட கஞ்சப் பயலுக்கு இன்னிக்கு ஏன் இவ்வளவு கருணை? சுண்டுவின் பொறுமைக்கு அவனும் சவால் விடுகிறானா? நளவிலாஸின் சாப்பாட்டு நினைவு பசியைக் கபகபவென்று பெருக்கிக் கொண்டிருந்தது. மணி பத்து. தாத்தா வரவில்லை. மணி பதினொன்று! தாத்தாவைக் காணோம். சுண்டுவும் குண்டுவும் ஏங்கி ஏங்கி இளைத்துக் களைத்து ஒருவர் மீது ஒருவர் சரிந்துபோய் விழுந்து கிடந்தார்கள். பசி...., பசி... பசி... அப்படி ஒரு பசி...! கண்ணை மூடினால் வெங்காய சாம்பாரும் ஜாங்கிரியும் மசால் வடையும் பாதாம்கீரும் தயிர்வடையும் வறுவலும் பொரியலுமாக மாறி மாறிக் கண் முன்னே வந்து கும்மாளமிட்டன. அதே சமயம் வயிறு பசியால் 'கொர்' என்று அழுதது. கடிகாரத்தைப் பார்க்கவும் முடியவில்லை. கண் முன்னே பூச்சி பறந்தது. அப்பாடா! ஒரு வழியாகப் பனிரண்டு முப்பதுக்குத் தாத்தா டாக்ஸியில் வந்து இறங்கினார்


''என்னடா பசங்களா? ஏன் இப்படி? சாப்பிடவில்லையா?'' வெற்றிலைக் காவியால் பட்டாகச் சிவந்திருந்தது அவர் வாய். சுண்டு குண்டுவினால் பேச முடியவில்லை. பசி மயக்கம். கட்டுண்ட தங்கள் இரு விரல்களையும் மட்டும் உயர்த்திக் காட்டினார்கள். அப்போதுதான் தாத்தாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''அடாடா! நான் மறந்தே போனேண்டா, கண்மணிகளா! நண்பர் வீட்டில் சாப்பிட உபசரித்தார். எல்லாம் மறந்துவிட்டது. ம்....ம்.... கிளம்புங்கோ. இப்போதே போகலாம்'' என்றார்.



''இன்னிக்கு இனிமே நள விலாஸ் சாப்பாட்டை எங்களால் ருசிக்க முடியாது. இனிமேல் இந்த மறதி முடிச்சை விரலில் கட்டிக்கொள்ள வேண்டியது நீங்கள்தான்!'' என்ற சுண்டுவும் குண்டுவும், ''அம்மா எங்கள் தட்டை எடுத்துப் போடு உன் சமையல்தான் அமிர்தம் என்றபடி தள்ளாடிக் கொண்டே உள்ளே போனார்கள். அதன் பிறகு இன்றுவரை அவர்கள் நள விலாஸ் பக்கம் போகவே இல்லை.


வீராதி வீரன்—
கதை கௌசிகன்
சித்திரம் ரமணி.
12
கடல் கொந்தளிப்பில் பாறைகளிடையே சிக்கிய அந்தப் படகு படாத பாடு பட்டது. ரஹீமின் வாயில்லாத் தோழர்கள் திகிலில் மிகவும் கலங்கிப் போயின. பெரும் அலைகள் மோதும் வேகத்தில் படகு எந்த நிமிஷம் உடையுமோ என்று ரஹீமும் நஸீரும் கலவரமடைந்தனர்.....
ந்த இருட்டிலும் பேய்க் காற்றிலும் கடலோரத்தில், இன்னொரு படகு வருவதை மின்னல் ஒளியில் கண்டார்கள் இருவரும்..
ரஹீம்! அதோ ஒரு மீன்பிடி படகு. உதவி கேட்டுக் குரல் கொடுப்போம். அவர்கள் படகில் நம்மை ஏற்றிக் கொள்ளலாம்.
அதோ அவர்கள் நம் குரல் கேட்டு நம் படகுக்கு கயிறு வீசுகிறார்கள். அதைப் பற்றிக் கொள்.
நஸீர் அவர்கள் வீசிய கயிற்றைத் தங்கள் படகின் பாய்மரக் கம்பத்தில் இழுத்துக் கட்டினான்.
ரஹீம், கயிறு உறுதியாக இருக்கிறது. உன் தோழர்களில் கழுதையை இங்கிருந்து வெளியேற்றுவதுதான் பிரச்னை?
பார்க்கிறேன். முதலில் நீ அங்கு போ. என் தோழர்களை ஏற்றி அனுப்புகிறேன்.
ரஹீம் யோசனைக்காரனாயிற்றே. ாய்மரத் துணியைத் தூளியாக்கி, கழுதையின் வயிற்றில் பதிய அதைக் கட்டினான். கழுதையின் முதுகில் மற்ற தோழர்கள் ஏறிக் கொண்டனர். சரக்கு மூட்டையைத் தூக்கி இறக்கு வதுபோலக் கழுதையை அந்தப்படகுக்கு மாற்றினார்கள்..
நல்ல சமயத்தில் உதவினீர்கள். நாங்களும் இங்கு வந்தோம். அந்தப் படகும் மூழ்கியது. அது சரி, நீங்கள் எங்கே போகிறீர்கள்?
அதோ, அங்கே கறுப்பாகத் தெரிகிறதே அந்தத் தீவுக்கு.


அப்போது பளீரென்று ஒரு மின்னல் வெட்டி இருளை விலக்கி ஒளியை வழிய விட்டது.
ரஹீம், அது தீவல்ல. பாதிஸ் தானியப் போர்க் கப்பலல்லவா?
இவர்கள் வங்காள மீனவர்களல்ல. பாதிஸ்தானியர். கடலுக்குக் கப்பி விரோதிகளிடம் சிக்கிக் கொண்டிருக்கிறோம்.
அப்படியே நில்லுங்கள். ஒரு அங்குலம் நகர்ந்தாலும் சுடுவேன். நீங்கள் யார் என்பதை எங்களுக்கு இந்தப் போஸ்டர் சொல்லுகிறது. உங்களை அந்தக் கப்பலிலுள்ளவர்களிடம் ஒப்படைத்தால் எங்களுக்குத் தொகுந்த பணம் கிடைக்கும்.
ரஹீம்! அப்படியே நகராமல் இரு. என்னை மறைத்துக் கொள். கழுதையின் பின்னால் நான் நழுவி ஒரு வேலை செய்கிறேன்.
ரஹீமுக்கு, நவீன் செய்யப் போவது என்ன என்பது புரிய விட்டாலும் அவன் சொற்படி நடந்தான். நவீன் மெள்ள நீரினுள் சரிந்தான்...
நன்றாக நீந்தத் தெரிந்தவன் நவீன் மூச்சுக் கட்டிப் படகின் அடியிலே போய்ச் சுங்கான் விசையைத் தன் பலங் — கொண்ட மட்டும் எட்டி உதைத்தான். அப்போது மேலே......
ஒரு கையில் சுங்கானையும் மறு கையில் துப்பாக்கியும் ஏந்தி நின்ற அந்தக் கயவனைச் சுங்கான் கட்டைத் திடீரென்று புரண்டு தாக்கியது. அவன் அலறிய படி கடலில் தூக்கி எறியப் பட்டான்.


டுத்த விநாடி சுங்கான் தன்று
ரெண்டு எதிர்த் திசையில் திரும்பி
ரொருவனையும் பளீரென்று தாக்
க் கடலுக்குள் தள்ளியது. இவை
ழுக் கடியில் இருந்த நவீன் வேலைக்
ளம் என்று சொல்ல வேண்டும்?
இரவு தேய்ந்து பொழுது புலர்ந்தது.
பத்திரமான இடம் தேடிப் படகைச
செலுத்தினர்கள், ரஹீமும், நவீனும்.
நதி கடலோடு கலக்கும் ஒரு முகத்து
வாரத்தில் ஒரு பாறையில் திருப்பத்
தில் எதிர்ப்பட்டது ஒரு போர் விமானம்.
அது கடலில் இறங்கும் வசதி பெற்றது.
வீன், என் அன்புத் தோழா! எப்
ப்பட்ட சாகஸம் புரிந்தாய். நீ நல்ல
மைசாலிதான். படகின் சுங்கானை
பற்றிப் படகைத் திருப்பு. அந்தப்
ார்க் கப்பலின் பார்வையிலிருந்து
ாம் விலகிப் போய் விட வேண்டும்.
நவீன், எப்படி என் திட்டம்? அந்தப்
படகில் நாம் அதிக தூரம் பிரயாணம்
செய்யமுடியாது. கடலில் விழுந்த —
அதன் சொந்தக்காரர்கள் படகைத்
தேடி வருவார்கள். ஆகவே ஒரே கல்
லில் இரண்டு செயல்கள் படகோடு வி
மானமும் மூழ்கியது. நாமும் பத்திர —
மாகக் கரை சேர்ந்து விட்டோம்.
அதைக் தாண்டிப் போக முடியாது. அதை விட்டு
வக்கவும் கூடாது. என்ன செய்யலாம்? ரஹீம்
மானத்தை நோக்கிப் படகை வேகமாகச் செலு
னான், படகு ஓர் எல்லைக்குள் சென்றதும்
தாரர்களோடு கடலில் குதித்தனர்...



உதைபந்து தயாரிப்பது எப்படி?

- கிருஷ்ணவேணி -

போன கோகுலத்தில் உதைபந்தாட்டம் பிறந்த கதையைத் தெரிந்து கொண்டீர்கள். அந்த உதைபந்து எப்படித் தயாரிக்கப்படுகிறது என்று தெரியுமா உங்களுக்கு? ஃபுட்பால் தயாரிப்பது இலேசான காரியமல்ல. அது ஒரு கலை.

ஃபுட்பால் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு ஓரளவு பதப்படுத்தப்பட்ட தோல்கள் வருகின்றன. அவைகளை மறுபடியும் பதப்படுத்துகிறார்கள். பல்வேறு நிலைகளுக்குப் பின் அந்தத் தோல்களை எவ்வளவு விரிவுபடுத்த முடியுமோ அவ்வளவுக்கு விரிவுபடுத்துகிறார்கள். இதைக் கையால்தான் செய்ய வேண்டும். (A) யந்திரங்கள் பயன்படாது. தரமான உதைபந்துகள் தயாரிக்க இம்முறையே சிறப்பானது.

நன்கு இழுத்து நீட்டி விரிவுபடுத்தப்பட்ட தோல்களை, யந்திரங்களின் உதவியால் பல்வேறு உருவ அமைப்புக் கொண்ட துண்டுகளாக்குகிறார்கள். (B) இந்தத் துண்டுகளை ஒன்றுசேர்த்துத் தைத்துத்தான் உதை பந்து தயாரிக்கப்படுகிறது. தோலைத் துண்டாடும்போது மிக்க கவனம் தேவை. தோல்நார்களின் திசை அமைப்புக்கு ஏற்றவாறு வெட்டும் கருவியை வைத்துச் சீராக வெட்ட வேண்டும். பல்வேறு வெட்டுக் கருவிகளைத் தக்கபடி பயன்படுத்துவதன் மூலம் தோல் வீணாகாமல் வெட்டுவதற்குத் திறமையும் அனுபவமும் தேவை. சிறப்பாக வெட்டப்படும் துண்டுகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பந்துகள் தரமானதாக, உறுதியானதாக அமையும்.

முதலில் உதை பந்துகள் எட்டுத் துண்டுகளால் (பானல்ஃஸ்) ஆக்கப்பட்டவைகளாக இருந்தன. ஆனால் இன்றைய பந்துகளில் பன்னிரண்டிலிருந்து பதினைந்து துண்டுகள் வரையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சில விசேஷமான பந்துகள் இருபத்தைந்து துண்டுகளை ஒன்று சேர்த்துத் தயாரிக்கப்படுகின்றன. மிகச் சிறந்த பந்தயத்துக்கான உதைபந்துகளைக் கையால் தைத்தே தயாரிக்கிறார்கள். உறுதியான திறமை மிக்க விரல்களைக் கொண்ட தொழிலாளியால்தான் தோல் துண்டுகளை இணைத்துத் தைக்க முடியும். (C) ஒரு பந்துக்கூடு தயாரிக்க இத்தகைய தொழிலாளிக்கு இரண்டரை மணி நேரமாகும். கடைசி இரு துண்டுகளை இணைத்துத் தைப்பதுதான் மிகத் திறமையான காரியம். பந்தின் அமைப்புக்கு அழகு வருவது இந்த நிலையில்தான். இதற்குத் தனிப்பட்ட திறமை, லாகவம் வேண்டும்.

தோலைப் பதனிட்டுப் பக்குவப்படுத்தி தனக்கு ஏற்ற வகையில் ஆடைகளாகவும் மற்றும் பலவித உபகரணங்களுக்கும் உபயோகிக்கும் வழிவகையை மனிதன் 5000 ஆண்டுகளாக அறிந்து வைத்திருக்கிறான். தோலைப் படைக் கருவிகளுக்கும் பண்ணைக் காரியங்களுக்கும் பயன்படுத்திக் கொண்டான். தோல் காகிதமாகவும் கரன்சியாகவும் கூடப்









பயன்பட்டது மனிதனுக்கு. விளையாட்டுப் பொருள்களைத் தோலில் உருவாக்கும் கலையையும் விடவில்லை அவன். பந்தய மைதானத்தில் ஓர் உதையில் விண்ணை முட்டச் செல்லும் உதை பந்தை. அவன் இந்த யந்திர யுகத்தி

லும்கூடக் கையினாலேயே செய்கிறான் என்பது கவனிக்க வேண்டிய ஒன்று. யந்திரங்களின் உதவி உதைப்பந்து தயாரிப்பில் மிகமிகக் குறைவு. கைகளினால் தைத்த ஃபுட்பால்தான் இன்றும் மிக உயர்வாகக் கருதப்படுகிறது.

இப்படித் தயாரித்த பந்து பூரணமாகிவிடாது. இது கூடுதான். இதனுள் காற்றை அழுத்தி வைத்துக் கொள்ளும் ரப்பரினாலான 'ப்ளாடர்' எனப்படும் பையைத் திணிக்க வேண்டும். இந்த 'ரப்பர் லாடெக்ஸ்' விரியக் கூடியது, உறுதி படைத்தது. சுலபத்தில் கிழிந்து போகாது. உதை பந்து தயாரிப்பின் கடைசி நிலை: தோல் பந்துக் கூட்டுக்குள் 'ப்ளாடரை'ப் பொருத்தி அதில் காற்றை நிரப்பிப் பரிசோதிப்பதுதான். இந்த நிலையில் பந்தின் உறுதியையும், தையல்களின் தரத்தையும் சோதிப்பார்கள். (D) காற்றின் அழுத்தத்துக்குத் தையல்கள் விடாமல் இருக்க வேண்டும். காற்று அழுத்தம், பந்தின் உறுதி முதலிய சோதனைகளுக்குப் பிறகே பந்துகள் விற்பனைக்கு வெளிவருகின்றன.

பதனிடப்படாத தோலிலிருந்து இத்தகைய பந்துகள் தயாரிக்க நான்கு மாத காலமாகிறது. இதற்குத் திறமை வாய்ந்த தோல் பதனிடுபவர், தோலைத் தரம் பிரிப்பவர், தோலை வெட்டுபவர், தோல் துண்டுகளைத் தைப்பவர் ஆகியோரின் உழைப்புத் தேவைப்படுகிறது. இத்தகைய திறமை பன்னெடுங்காலமாக அனுபவத்திலே வழி வழியாகத் தொடர்வதாகும்.

மைதானத்தில் விளையாட்டு வீரர் உதை பந்தைத் தனது காலினால் வேகமாக உதைக்கும்போது ஏற்படுவது என்ன? (E) தோல் உறை சற்றே வளைந்து கொடுக்க உள்ளே இருக்கும் காற்று அழுத்தத்தினால் அது மறுபடியும் நிமிர்ந்து காலின் வளைவுக்கு ஏற்பப் பொருந்திக் கொள்ளுகிறது. அதே சமயம் மணிக்கு நூறு மைல் வேகத்தில் விண்ணிலே அநாயாசமாகப் பறக்கிறது.





வாழைக்காய் பஜ்ஜி வடிக்குது கண்ணீர்!

கோ. கந்தசாமி

வாழைக்காய் பஜ்ஜி என்னை
வாயில் போடும் தம்பி
ஏழை எந்தன் அவதாரத்தைச்
சொல்வேன் கேளு நம்பி

வாழையடி வாழையாக
வந்த தொரு மரமே
தாய்மையாகி அதுவும் உடன்
தள்ளின குலைச் சரமே

தோட்டக்காரக் குப்பன் வந்து
தட்டித் தட்டிப் பார்த்தான்
வாட்டமாக வளர விட்டு
வெகுநாளை அவன் தீர்த்தான்

கௌரவரைப் போல நாங்கள்
கும்பலாக இருந்தோம்
யவ்வனமும் அடைந்ததையே
எண்ணிக் கண்ணீர் சொரிந்தோம்

உற்றவனும் ஓடி வந்து
உள்ள மகிழ்ச்சி யாலே
பெற்றவளைப் பிரித்து விட்டான்
பணத்தின் ஆசை யாலே

குண்டுபட்ட குடும்பம் போல
கத்தியாலே சிதைந்தோம்

கண்டுவிட்ட கூடைககாரி
கையும் பட்டுப் பிரிந்தோம்

அண்ணன் தம்பி மாரைவிட்டுத்
தன்னந் தனியே நின்றேன்
என்னை எடுத்து விலையைக் கேட்டாள்
அவளுடனே வந்தேன்.

வாங்கிவந்த உந்தன் அன்னை
வெட்டிவிட்டாள் என்னை
தாங்குவாளா இந்த நிலை
இருந்தால் எந்தன் அன்னை?

கடலை மாவைக் கரைத்து எந்தன்
உடலைத் தோய்த்து எடுத்து
மட மடென்று எண்ணெயிலிட்டு
மாதா உனக்குக் கொடுத்து

பஜ்ஜி என்று பெயரைச் சொன்னாள்
பரபரப்பாய் நீயும்
கச்சிதமாய் எடுத்து என்னைக்
கடிக்கு துந்தன் வாயும்

உருவம் மாறி வேறு உருவில்
உந்தன் பசியைத் தீர்த்தேன்
பெருமையோடு எந்தன் முகத்தைப்
பெற்றவளும் பார்த்தாள்!






பரமானந்தத்தைக் கொன்றது யார்?





பண்ணையார் பரமானந்தம் அந்தப் பெரிய விளையாட்டு மைதானத்தில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். கொலை செய்தது யார் என்பதை இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லை. உங்களால் முடியுமா பாருங்கள்.

அந்த விளையாட்டு மைதானம் ரொம்ப விஸ்தாரமானது. அதைச் சுற்றி மதில் சுவரும் அதில் ஏழு நுழை வாசல்களும் உண்டு. உள்ளே ஒரு புல் பூண்டு கிடையாது. வெறும் மணற்பரப்பு. ஒரு மூலையில் விளையாட்டுச் சாமான்களைப் போட்டுப் பூட்டி வைக்கும் அறையும் இன்னொரு கோடியில் காவல்காரனின் குடிசையும்தான் அதனுள்ளிருந்தன. பரமானந்தம் அன்று ஒரு நண்பரின் வீட்டுக்கு விருந்துக்குப் போனார். நள்ளிரவு வரை அவருடனோடு அளவளாவிவிட்டு வீடு திரும்பினார். அவர் வீட்டுக்கு இடையேதான் விளையாட்டு மைதானம். அதில் ஒரு வாசல் வழியே நுழைந்து குறுக்கே போய் வேறு வாசல் வழியே வெளியேறுவதானால் வீட்டுக்குச் சீக்கிரம் போய்விடலாம். இல்லாவிட்டால் மைதானத்தைச் சுற்றிக் கொண்டு போக வேண்டும். பரமானந்தம் 'D' என்ற நுழைவாசலில் புகுந்து 'A' வாசல் வழியாக வெளியேறும் நோக்கத்துடன் நடந்தார். ஆனால் காலையில் நட்சத்திரக் குறியிட்ட இடத்தில் போலீஸ் அவரது உயிரற்ற உடலைத்தான் பார்த்தது. நள்ளிரவுக்கு முன்னால் திடீரென்று ஒருகால் மணிக்கு நல்ல மழை பெய்திருந்ததால் மைதானத்தில் பதிந்திருந்த காலடித் தடயங்கள் நன்கு தெரிந்தன. ஆகவே போலீஸ் உடனே ஏழு கேட்டுகளையும் அடைத்தது. சரமண்ணில் பதிந்துள்ள காலடிகளை ஆராயலானார்கள். பரமானந்தத்தின் காலடி 'D' கேட்டிலிருந்து அவர் விழுந்து கிடந்த இடம் வரை துல்லியமாகத் தெரிந்தது. விளையாட்டுப் பொருள்களுக்குப் பொறுப்பாளியான முருகையன், கடைசி ஆட்டம் சினிமாவுக்குப் போய்விட்டுத் திரும்பியவன் தனது அறையான 'EE'க்குப் போக 'E' கேட் வழியாகச் சென்றிருந்தான். நள்ளிரவுக்குச் சற்று முன்னதாக அவன் தன் அறைக்குச் சென்று தூங்கப் போயிருக்கிறான். அவனது காலடியும் சுத்தமாகத் தெரிந்தது. மைதானத்துக் காவல்காரனின் மனைவி மாமியார் வீட்டுக்குப் போயிருந்தாள். அவளைப் பார்த்துவிட்டுத் திரும்பிய காவல்காரக் கந்தசாமி தன் குடிசையான 'AA'க்கு கேட் 'A' வழியாக நுழைந்து வந்திருந்தான். அதை அவன் காலடி சொல்லிற்று. இவ்விருவர்களைத் தவிர ஒரு தடம் 'B' கேட் வழியே புகுந்து 'BB' கேட் வழியே வெளியேறி இருந்தது. இன்னொரு காலடி 'C' கேட்டில் புகுந்து 'CC' கேட் வழியே வெளியேறியிருந்தது. ஆகவே மழை பெய்து நின்ற பிறகு இந்த ஐந்து பேரைத் தவிர மைதானத்துக்குள் வேறு யாரும் நுழையவில்லை. இதில் ஒரு முக்கியமான விஷயம் ஒருவருடைய காலடிகளை மற்றவர்களுடைய காலடிகள் வெட்டிக் கடக்கவில்லை. ஒவ்வொருவரின் தடங்களும் தனி வழியாகவே புலப்பட்டன. இது எப்படி முடியும் என்கிறீர்களா? இவர்கள் நேர் நேராக நடக்கவில்லை. வளைந்து வளைந்து நடந்திருக்க வேண்டும். பரமானந்தத்தைக் கொலை செய்தது யாராக இருக்கும்? காவல்காரக் கந்தசாமியா? முருகையனா? அல்லது 'B' கேட்டில் நுழைந்த நபரா? 'C' கேட்டில் புகுந்து வெளியேறியவரா? கீழேயுள்ள மைதானத்தின் படத்தைக் கொண்டு கண்டுபிடியுங்கள். யாரும் யாருடைய பாதையையும் கடக்கவில்லை. இருளில் சிலபேர் வெளியேறும் வழி தெரியாமல் அலைந்திருக்கிறார்கள். ஆனாலும் ஒவ்வொருவரின் காலடிகளும் துல்லியமாகப் பதிவாகியிருப்பதால் குழப்பத்துக்கு இடமில்லை. எங்கே, நான்கு பேரில் பரமானந்தத்தைக் கொன்றது யார் என்பதைக் கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்.


— வி. கே.







விடை: இங்குள்ள படங்கள் இரண்டு வழிகளை விளக்குகின்றன. பரமானந்தத்தை இரண்டே பேர்கள்தான் நெருங்கி இருக்க முடியும். ஒன்று முருகையன் மற்றது 'C' கேட் வழியாக நுழைந்த ஆசாமி. இதில் முருகையன் நள்ளிரவுக்கு முன் படுத்துக் கொண்டு விட்டான். பரமானந்தமோ நள்ளிரவுக்குப் பிறகுதான் மைதானத்துக்குள் நுழைந்திருக்கிறார். ஆகவே பரமானந்தத்தைக் கொன்றது 'C' கேட் வழியாக நுழைந்த நபர்தான்.



நசிகேதன்

ரா. கணபதி

வாஜசிரவஸ் என்ற வேதியர் 'விசுவஜித்' என்கிற வேள்வியைச் செய்தார். ஒருவர் தமது உடைமை அனைத்தையும் இந்த வேள்வியில் தக்ஷிணையாகத் தானம் செய்வார். வாஜசிரவனிடமிருந்த உடைமை அனைத்தும் கிழட்டுப் பசுக்கள்தாம். அவற்றை அவர் தக்ஷிணையாகக் கொடுத்தார்.

இதைப் பார்த்துக் கொண்டேயிருந்தான் அவரது இளம் குமாரன் நசிகேதன். அவனுக்கு உண்மையான சிரத்தை ஓங்கி எழுந்தது. ''இந்தக் கிழட்டுப் பசுக்கள் தின்ன வேண்டிய புல்லை எல்லாம் தின்று, குடிக்க வேண்டிய நீரையும் குடித்துவிட்டுச் சாவதற்கே தயாராக இருப்பதுபோல் தோன்றுகின்றன. அவற்றிடமிருந்து பாலை எல்லாம் நாமே கரந்து குடித்தாயிற்று. இனி பாலும் தரச் சக்தி அற்றவை இந்தப் பசுக்கள். அவை இனிமேல் கன்றுகளும் ஈன முடியாது. இப்படிப்பட்ட உபயோகமற்ற பசுக்களைத் தானம் தந்துவிட்டு, அதற்குப் பிரதியாக ஆனந்தமான மேலுலக வாழ்க்கையைப் பெறலாம் என்று அப்பா எண்ணுகிறாரே! இது எப்படி முடியும்? தானம் வாங்குகிறவர்களுக்குச் சுமையாகவே இருக்கும் இப்பசுக்களைத் தானம் செய்வதால் துன்ப லோகத்துக்குத்தான் போக முடியும்'' என்று எண்ணினான் நசிகேதன்.

'அப்பாவிடம் இந்தப் பசுக்களைத் தவிர உள்ள ஒரே சொத்து நான்தான். என்னை யாருக்கேனும் தானம் செய்தால் அவருக்கு நான் உபயோகமாயிருப்பேன். அதன் மூலம் அப்பா ஆனந்த உலகை அடைவார்' என்றும் நசிகேதனின் தியாக உள்ளம் எண்ணியது.

தந்தையிடம் சென்று, ''அப்பா! என்னை யாருக்குத் தானம் செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

பிள்ளையைத் தானம் செய்வது கேட்டறியாத விஷயம்! வாஜசிரவனுக்கு நசிகேதனின் கேள்வி விசித்திரமாகப்பட்டது. அதிகப் பிரசங்கித்தனமாகவும் தோன்றியது. எனவே, அந்தக் கேள்விக்கு அவர் விடையே சொல்லவில்லை.

நசிகேதன் மும்முறை திரும்பத் திரும்பக் கேட்டான்: ''அப்பா! என்னை யாருக்குத் தானம் செய்யப் போகிறீர்கள்?''

வாஜசிரவன் பொறுமை இழந்தார். கோபத்தில், ''உன்னையா? உன்னை யமனுக்குத் தானம் செய்கிறேன்'' என்றார்.

பிள்ளை தனது அப்பா ஆனந்த லோகத்துக்குப் போக வேண்டும் என்று ஆசைப்பட்டான்! அப்பாவோ அந்தப் பிள்ளையைத் துன்ப லோகமாகிய யம லோகத்துக்கு அனுப்புகிறேன் என்றார்.

வேள்விச் சாலையில் அப்பா சொன்ன வார்த்தைகள் பொய்யாகக் கூடாது என்று எண்ணினான் நசிகேதன். எனவே உண்மையாகவே யமலோகம் போய்விட வேண்டும் என்று தீர்மானித்தான். 'தந்தையின் எல்லாச் சீடர்களும் என்றோ ஒருநாள் மரணமடைந்து யம லோகம் போகத்தான் வேண்டும். அவர்களில் நானும் ஒருநாள் போகத்தான் வேண்டும். இப்போதேதான் போய்விடுவோமே' என்று எண்ணினான். 'ஆனால் மனிதரில் எவருக்கேனும் தன்னைத் தானம் தந்திருந்தால் அவருக்கு உழைத்து, உபயோகமாக இருக்கலாம். யமதர்மராஜனுக்கு மானுடச் சிறுவனான தன்னால் என்ன உபயோகம் இருக்கும்? யமனுக்கு என்னால் உபயோகம் இருந்தால்தானே அப்பா செய்த தானத்துக்குப் பலன் இருக்கும்?'' என்றும் எண்ணினான்.

அதெப்படியாயினும் தந்தை சொன்ன சொல் பொய்யாகிவிடாமல், தான் யமனுலகு சென்றுவிட வேண்டுமெனத் தீர்மானித்துவிட்டான் நசிகேதன்.

தூய்மையும் தியாகமும் நிறைந்த நசிகேதன் போன்றவர்களுக்கு, யம லோகம் முதலிய மற்ற லோகங்களுக்குத் தானாகவே வழி தெரிந்துவிடும். நசிகேதன் யமனுலகுக்குப் புறப்பட்டுவிட்டான்.

''முன்னோர்கள் வாக்குத் தவறாமல் வாழ்ந்தனர். அவர்கள் வழியிலேதான் நாமும் செல்ல வேண்டும். நான் போகிறேன் என்று வருந்த வேண்டாம். மனிதர்கள் என்றேனும் ஒரு நாள் மரணமடையத்தானே வேண்டும்? பூண்டு போல் தோன்றி, பூண்டுபோல் அழிவதே அல்லவா மனித குலத்தின் இயற்கை?'' என்ற பெரிய மொழிகளைத் தந்தையிடம் சொல்லி விடை பெற்றான் நசிகேதன்.

யமனுடைய மாளிகையை நசிகேதன் அடைந்தபோது யமதர்மராஜன் எங்கோ வெளியே சென்றிருந்தார். மூன்று நாட்களுக்குப் பிறகுதான் அவர் திரும்பினார்.

உத்தமச் சிறுவனை நசிகேதன், தந்தையின் வாக்கைக் காப்பதற்காக யமனுலகம் வந்ததையும், அங்கு மூன்று நாட்கள் பட்டினியுடன் காத்திருப்பதையும் கண்ட யமனுக்கு அவனிடம் மிகுந்த அன்பு உண்டாயிற்று. அந்த உத்தமச் சிறுவன் தக்க உபசாரமில்லாமல் தன் மாளிகையில் மூன்று தினங்கள் இருந்ததால, தன்னுடைய செல்வமெல்லாம் அழிந்து போய்விடும் என்று யமன் பயந்தான்!

சிறுவன் நசிகேதனை நமஸ்கரித்தான் யமன். ''அந்தணச் சிறுவனே! நீ மூன்று நாட்கள் என் வீட்டில் பட்டினி கிடந்ததால் எனக்கு ஏற்பட்டுள்ள குற்றம் நீங்க உனக்கு மூன்று வரங்கள் தருகிறேன்'' என்றான் யமன்.

''யம தர்மராஜனே! என் தந்தை என்னைக் குறித்து அமைதியான எண்ணம் உடையவராகட்டும். அவரது மனக் கலக்கமும், கோபமும் நீங்கட்டும். நீ என்னைத் திருப்பி அனுப்பிய பின் அவர் என்னை மகிழ்ச்சியுடன் ஏற்கட்டும். இதுவே என் முதல் வரம்'' என்றான் மகாபுத்திசாலியான நசிகேதன்.

யமன் தன்னைத் திருப்ப அனுப்ப வேண்டும் என்பதை ஒரு வரமாகவும், அதன்பின் அப்பா தன்னை அன்போடு வரவேற்க வேண்டும் என்பதை இரண்டாவது வரமாகவும் கேட்கவில்லை அந்தக் கெட்டிக்காரப் பையன்.

அன்புள்ளம் கொண்ட யமன், வேண்டாமலே தன்னை விடுவிப்பான் என்ற கருத்தை அடக்கி, இரண்டு வரங்களை ஒன்றாக்கி விட்டான்!

யமன் அவனது கெட்டிக்காரத்தனத்தில் மகிழ்ச்சி அடைந்து, ''அவ்விதமே வரம் தந்தேன். மரணத்தின் வாயிலிருந்து விடுபட்ட உன்னை உன் தந்தை ஆர்வத்துடன் வரவேற்பார். இனி அவர் கோபமே கொள்ளமாட்டார். மனச் சஞ்சலத்தால் இரவுத் தூக்கத்தை இழந்திருக்கும் அவர் இனி ஆனந்தமாகத் தூங்குவார்'' என்றான்.

தந்தைக்குக் கோபமற்ற நல்ல உள்ளமும், கவலையற்ற வாழ்க்கையும் கிடைத்து விட்டன. நசிகேதன் யமனுக்கு உழைத்து உபயோகமாயிராமலே தந்தைக்கு நன்மை செய்து விட்டான்!

''இரண்டாவது வரம் கேள்'' என்றான் யமன்.

உலகில் கொடியவர்களாக வாழ்ந்தவர்கள் மரணமடைந்தபின் யமனுலகு செல்வர். நல்லவர்கள் சுவர்க்கம் செல்வார்கள். சுவர்க்கத்தை அடைவதற்கு 'அக்கினி வித்தை' என்ற யாகமும் உதவும். இந்த அக்கினி வித்தையைப் போதிக்குமாறு யமனைக் கேட்டுக்கொண்டான் நசிகேதன். இதுவே இரண்டாவது வரம். அதையும் அளித்தான் யமன். யம லோகத்துக்கு வந்து சுவர்க்க லோகத்துக்கு வழி தெரிந்துகொண்டு விட்டான் புத்திசாலி நசிகேதன்!

''இந்த 'அக்கினி வித்தை'க்கு உன் பெயரையே கொடுத்தேன். இனி இது 'நாசிகேத அக்கினி' என்ற பெயர் பெறும். இது முன்பு நான் வாக்களித்த மூன்று வரங்களுக்கு அதிகமாக நானுகத் தரும் இன்னொரு வரம். இந்தா, இந்த ரத்தின மாலையையும் வாங்கிக் கொள்'' என்று பரிசும் தந்தான் யமன்.

ஆனால் நசிகேதனுக்குப் பொருள் ஆசையோ இல்லையாது. எனவே, அந்த



ரத்தின மாலையை அவன் வாங்கிக் கொள்ளவில்லை.

கெட்டவர்கள் நரகத்தில் போய்க் கஷ்டப்பட்டுவிட்டு, மீண்டும் பூமியிலேயே வந்து பிறப்பார்கள். நல்லவர்கள் சுவர்க்கத்தில் இன்பம் அநுபவித்துவிட்டு, மீண்டும் பூமிக்கே வந்து மறு பிறவி எடுப்பார்கள். மரணத்துக்குப் பின் ஏற்படும் மர்மங்களையும் மறு பிறவியே எடுக்காமல் கடவுளிடம் நிலையாக இருக்கும் வழியையும் அறிய விரும்பினான் நசிகேதன். இந்த அறிவை அளிக்குமாறு மூன்றாவது வரத்தைக் கேட்டான்.

இந்த மிகப் பெரிய விஷயத்தை அந்தப் பையனுக்கு எளிதில் உபதேசிக்கக் கூடாது என்றும், அவனை நன்கு பரீட்சை செய்த பின்பே உபதேசிக்க வேண்டுமென்றும் யமன் கருதினான்.

எனவே, ''நசிகேதா! உனக்கு ஏராளமான பசுக்கள், யானைகள், குதிரைகள், மக்கள், பொன் இவற்றைத் தருகிறேன். அரசு தருகிறேன். இந்த வரம் மட்டும் தருவதற்கில்லை'' என்றான் யமன்.

மிகுந்த புத்திமானாகிய நசிகேதன், ''அந்தகா ! நீ ஏதேதோ தருகிறேன் என்கிறாயே, அவை அனைத்துக்கும் என்றோ ஒரு நாள் அழிவு உண்டு. அழிந்தபின் அவை உன்னிடம்தான் திரும்பப் போகின்றன ! எனவே இப்போது தருவதாகச் சொல்வதை எல்லாம் நீயே பிறகு எடுத்துக் கொள்ளப் போகிறாய்! என்றும் அழியா ஞானத்தை மட்டுமே எனக்குத் தருவாய்'' என்றான்.

யமன் நசிகேதனின் உறுதியையும், தெளிவையும் மெச்சி அவனுக்கு ஞான உபதேசம் அளித்தான். நசிகேதன் என்றும் அழியாத அமர நிலை பெற்றான்.

"உள்ளதும் போயிற்று!"

ஓர் ஊரில் ஒரு ஜமீன்தார் இருந்தார். அவர் அரண்மனையில் ஒரு நாள் பெரிய விருந்து நடந்தது. பெரிய மனிதர்கள் எல்லோரும் வந்தார்கள். விருந்து எதற்காகத் தெரியுமா? ஜமீன்தாருக்கு ஓர் அபூர்வமான வைரம் கிடைத்தது. அதை மோதிரமாகச் செய்திருந்தார். அதை எல்லோருக்கும் காண்பிக்கவே விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.


ஒரு வெள்ளித் தட்டில் வைர மோதிரம் எல்லாருக்கும் தெரியும்படி வைக்கப்பட்டிருந்தது. விருந்து ஆரம்பமாகியது. விருந்துக் கோலாகலத்தில் அந்த மோதிரத்தைக் காணவில்லை. எவரோ திருடிக் கொண்டுவிட்டார்கள். விருந்து முடிந்ததும் ஜமீன்தார் அம்மோதிரத்தைக் கண்டுபிடிக்க ஒரு தந்திரம் செய்தார்.

''இங்கு வைத்திருந்த மோதிரம் காணப்படவில்லை. களவு போய்விட்டது. நீங்கள் எல்லாருமே பெரிய மனிதர்கள். எல்லோரையும் சோதனை போடுவது அழகல்ல. நான் விளக்குகளை அணைக்கச் சொல்லுகிறேன். மோதிரத்தை எடுத்தவர் இருட்டில் யாருக்கும் தெரியாமல், மோதிரத்தைத் தட்டில் வைத்து விடுங்கள். அதன் பிறகு மீண்டும் விளக்கை ஏற்றச் சொல்லுகிறேன்'' என்றார் ஜமீன்தார். எல்லோரும் இதற்கு ஒப்புக் கொண்டனர்.

சற்று நேரத்தில் விளக்குகள் அணைக்கப்பட்டு இருட்டாயிற்று. சிறிது நேரத்துக்குப் பிறகு மறுபடியும் விளக்குகள் ஏற்றப்பட்டன. எல்லோரும் மோதிரம் தட்டில் இருக்குமென எதிர்பார்த்தனர். ஆனால் மோதிரம் வைக்கப்பட்டிருந்த வெள்ளித் தட்டும் மாயமாய் மறைந்து போயிருந்தது!

— டொக்கி





பஸ் ஸ்டாப்பில் மணிக் கணக் காகக் காத்து நின்ற அந்த அப்பாவி மனிதர் கடவுளிடம் வேண்டினர்: ''கடவுளே! என்னுடைய கஷ்டத்துக்கு இரக்கப் பட்டு ஓர் ஓட்டை பஸ்ஸாவது வந்து நிற்கக் கூடாதா?

அவர் வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பதுபோல் உடனடி யாக ஓர் ஓட்டை பஸ் வந்து நிரந் தரமாகவே நின்று விட்டது!

— கே. வி. ராமன்



தகப்பனர்: பையன் தூக்கம் வராம ரொம்பக் கஷ்டப்படறன் டாக்டர்! நீங்கதான் ஏதாவது நல்ல மருந்தாக் கொடுக்கணும்!

டாக்டர்: நீங்க சொல்றதைப் பார்த்தால் பையன் படிக்கறதே இல்லே போலிருக்கே. புத்த கத்தை எடுத்தால் தூக்கம் தானுக வந்திடுமே!

— என். சந்திரசேகரன்



விருகூன ஆசிரியர்: டேய் மணி! திரவத்துக்கு ஓர் உதார ணம் சொல்.

மணி: உபத்திரவம் ஸார்...!

என். சுப்பிரமணியன்



ஒருவர்: உங்க வீட்டுக்கு யானை ஒன்று வந்திருக்கிறதே. அது யாருடையதுங்க ?


தடித்த மனிதர்: அது என் னுடையதுதாங்க. என்னுடைய பிறந்த நாளுக்கு இந்த வார்டு மக்கள் என் எடைக்கு எடை கொடுத்த பரிசுங்க !

மற்றவர்: ? ! ? !..

— காழி பழனி



''கோழை! என்னைப் பார்த்து ஏண்டா பயந்து ஓடறே? தைரிய மிருந்தா என்ஞேட சண்டைக்கு வாடா, பார்க்கலாம்.''



புத்திமான், பலவான்

அழகிரி விசுவநாதன்

அபூபக்கர் மரைக்காயர் மூன்று நான்கு மாதங்களாகவே நோய்வாய்ப் பட்டிருந்தார். அவருக்கும் வயது அறுபதுக்குமேல் ஆகிவிட்டது. மரைக்காயரை வந்து பார்த்துவிட்டுப் போன டாக்டர் 'இனி நம்ப முடியாது' என்று சொல்லிவிட்டார். மரைக்காயரும் தம் முடிவு நாள் நெருங்கிவிட்டதை உணர்ந்தார். தம்முடைய இரண்டு பிள்ளைகளைப் பற்றி நினைக்கும் போதுதான் அவருக்கு ரொம்பவும் வருத்தமாக இருந்தது. பெரிய மகனுக்கு வயது இருபத்துநான்கு இருக்கும். பெயர் சாப்ஜான். சின்னவனுக்குப் பதினெட்டு வயது இருக்கும். அப்துல்காதர் என்று பெயர். சின்னவனைப் பற்றிக்கூட அவர் அவ்வளவு கவலைப்படவில்லை. அவன் கொஞ்சம் புத்திசாலி. எப்படியாவது பிழைத்துக் கொள்ளுவான் என்று நினைத்தார். சாப்ஜானுக்கு வயதுதான் ஆகிவிட்டதே தவிர, அவன் அவ்வளவு புத்திசாலியல்ல. என்ன செய்வது என்று யோசனை செய்தார் மரைக்காயர்.

ஒரு காலத்தில் 'ஓஹோ' என்று வாழ்ந்தவர் அவர். அதிராம் பட்டணத்தில் நிறைய உப்பளங்கள் இருந்தன. 'உப்பு' மரைக்காயர் என்றால் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். ரொம்பவும் பணக்காரராக இருந்தார். இடையில் வியாபாரத்தில் எதிர்பாராமல் நஷ்டம் ஏற்பட்டதால் நொடித்துப் போனார்.

கண்ணீர் நிறைந்த கண்களுடன் நின்று கொண்டிருந்த தம் பிள்ளைகளை அருகில் அழைத்துத் நட்டுத் தடுமாறிச் சொன்னார் : " செல்வர்களே! என் இறுதிக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அல்லா என்னை அழைக்கிறார். உங்களுக்கு இரண்டு பெட்டிகளை ஆஸ்தியாக வைத்துவிட்டுப் போகிறேன். அவை விலை மதிப்பிட முடியாதவை. நான் இறந்த மூன்றாவது நாள் ஒரே சமயத்தில் இருவரும் பெட்டியைத் திறந்து பாருங்கள். புத்திமான் பலவான்...." அதற்குள் மரைக்காயருக்குத் தொண்டை அடைத்தது. சாப்ஜானும் அப்துல்காதரும் வைத்தியரை அழைத்து வர ஓடினார்கள்.

மரைக்காயர் மறைந்த மூன்றாவது நாள்.

சாப்ஜான் தன்னுடைய பெயர் எழுதி ஒட்டியிருந்த பெட்டியைத் திறந்து பார்த்தான். ரொம்ப இல்லாவிட்டாலும்; கொஞ்சமாவது பணம், காசு, பவுன், வெள்ளி இருக்கும் என்று எதிர்பார்த்தான்.

ஆனால், அப்துல்காதரோ, 'புத்திமான் பலவான்' என்று அப்பா சொன்னாரே, ஆகையினால் ஒன்றும் அதிகமாகப் பெட்டியில் இருக்காது என்று எண்ணினான். அதேபோல் அவனுடைய பெயர்



ூதி ஒட்டியிருந்த பெட்டியில், ஒரு
று ரூபாய் நோட்டும், ஒரு தராசுப்
டிக்கல்லும் கொஞ்சம் வெங்காயமும்
ருந்தன. அவைகளை மரியாதையோடு
ித்துக் கொண்டான்.

சாப்ஜானுடைய பெட்டியில் ஒரு
று ரூபாய் நோட்டும், ஓர் அரிவாளும்
ரண்டு தேங்காய்களும் இருந்தன.
நகை, நட்டு, பொன், பணம் முதலிய
ற்றை எதிர்பார்த்த சாப்ஜானுக்கு
து பெரிய அதிர்ச்சியாகவே இருந்தது.
தங்காயை உடைத்துத் தின்று
ட்டு, அரிவாளை உபயோகமற்றது
ன்று தூக்கிக் கடலில் எறிந்தான்.
ந்தை வைத்துவிட்டுப் போன நூறு
பாய் 'சொத்து' அவனுக்கு இரண்டு
'ட்கள் செலவுக்குக்கூட வரவில்லை.

''புத்திமான் பலவான்'' என்று
ப்பா எதற்காகச் சொன்னார் என்று
ப்துல்காதர் பல முறை யோசித்துப்
ார்த்தான். ''புத்திதான் ஒருவனுக்கு
ழியாத, நிரந்தரமான சொத்து''
ன்று மறைமுகமாகச் சொன்னதாக
வனுக்குப்பட்டது. நூறு ரூபாய்க்கு
வங்காயம் மொத்தமாக வாங்கிக்
காண்டு வந்து, சில்லறையில் நியாய
ான லாபத்துக்கு விற்றான். அப்பா
ன் ராசியான தராசில் வியாபாரம்
ளமள'வென்று பெருகியது. பத்து
ருடங்களில் பெரிய பணக்காரனாகி
'ட்டான். கல்யாணமாகி இரண்டு
ழந்தைகளும் பிறந்தன.

சாப்ஜான் ரொம்பவும் சிரமப்பட்டுப்
பானான். கூலி வேலை செய்து பிழைத்
துக் கொண்டிருந்தான். தம்பியைப்
ார்த்துப் பொறாமைப் பட்டான்.

ஒரு நாள் ஒரு வெங்காய மூட்டை
யைத் தலையில் சுமந்துகொண்டு அப்துல்
ாதரின் கடைக்கே வந்தான் அண்
ான். அண்ணனின் அவல நிலைக்காக


வருந்தினான் தம்பி. ''அண்ணா! உனக்கு
இந்த நிலையா?'' என்று கண்ணீர்
மல்கக் கட்டித் தழுவிக் கொண்டான்.

அப்துல்காதர் அறைக்குள் சென்று
ஓர் அரிவாளுடன் திரும்பி வந்தான்.
எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்
தார்கள். ''அண்ணா! இந்த அரிவாளைப்
பார்த்தாயா? இது நம்முடைய தந்தை
யார் வைத்திருந்த அரிவாள். 'அ.ப.
மரைக்காயர்' என்று பெயர் வெட்டி
யிருக்கிறது, பார்! நான் இப்போது
புதிதாக வாங்கியிருக்கிற உப்பளங்
களைப் பார்த்து வருவதற்காகக் கடற்
கரைக்குச் சென்றேன். அங்கு இந்த
அரிவாளை ஒரு செம்படவன் வைத்திருந்
தான். சிப்பி எடுக்கக் கடலில் மூழ்கிய
போது கிடைத்ததாம். தேங்காயையும்
அரிவாளையும் உனக்கு எதற்காக,
'சொத்'தாகக் கொடுத்தார் அப்பா?
நீ தேங்காய் வியாபாரம் செய்து புத்தி
யுடன் பிழைத்துக் கொள்ள வேண்டும்
என்பதற்காகத்தான்....'' என்றான்.

சாப்ஜான் கண்களில் கண்ணீர்
வழியக் கேட்டான்: ''ஆனால், தம்பி,
இப்போது என்னிடம் ஒரு நூறு காசு
கூட முதலாக இல்லையே?''

''கவலைப்படாதே, அண்ணா! இந்த
இரும்புப் பெட்டியில் நிறையப் பணம்
இருக்கிறது. எத்தனை ஆயிரம் வேண்டு
மானாலும் எடுத்துக் கொள்!'' என்று
அப்துல்காதர் பெருந் தன்மையுடன்
தன் அண்ணனிடம் சொன்னான்.

இரும்புப் பெட்டிக்கு அருகில் மெல்ல
நடந்து சென்றான் சாப்ஜான். ஒரே
ஒரு நூறு ரூபாய் நோட்டை மட்டும்
எடுத்துக் கொண்டான். ஒரு கையில்
அப்துல்காதர் கொடுத்த தகப்பனாரின்
பழைய அரிவாள் இருந்தது. இப்போது
அவனுடைய வாய், 'புத்திமான் பல
வான்' என்று முணுமுணுத்துக் கொண்
டிருந்தது.



தெரியுமா?

213. முகர்ந்து பார்த்தால் சிரிக்க வைக்கும் குணத்தைக் கொண்டது ஒரு வாயு. இதைக் கண்டுபிடித்தவர் யார்?

214. அமெரிக்க நாட்டு ரிப்ப்ளிக்கன் கட்சியின் சின்னம் எது?

215. அமெரிக்க ஜனதிபதி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

216. டல்லாஸ் அமெரிக்காவின் எந்த மாகாணத்திலுள்ளது!

217. இரண்டு கண்டங்களிலும் ஒரு நகரத்தின் எல்லை இருக்கிறது. அது எந்த நகரம்?

218. இன்றைய கானு 1957ம் ஆண்டுவரை எந்தப் பெயரினல் அழைக்கப்பட்டது?

219. இவை எங்கே இருக்கின்றன? (அ) பேர்ள் ஹார்பர் (ஆ) போண்டி பீச் (இ) ரேடியோ ஸிடி, (ஈ) டோப்ருக்.

220. ஜார்ஜ் எலியட் ஆணு பெண்ணு?

221. குழந்தைகளுக்கான தேவதைக் கதைகள் எழுதிய டென்மார்க் தேசத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் யார்?

222. ஒலிம்பிக் விளையாட்டுக்கள் முதன் முதலில் எங்கு விளையாடப்பட்டது?

223. உலகிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் செய்திப் பத்திரிகை எது?

224. மொஸாம்பிக்கை ஆட்சி புரியும் நாடு எது?


225. பிரிட்டனின் முதல் பெரிய அணுசக்தி ஆராய்ச்சி நிலையம் அந்த நாட்டில் எங்குள்ளது?


226. பிரிட்டிஷ் டொமினியனிலுள்ள பிரிட்டிஷ் அரசியின் பிரதிநிதிக்கு என்ன பெயர்?

227. ஜார்ஜ் கிராஸ் தீவு என்று எதற்குப் பெயர்?

228. மடகாஸ்கர் எந்த நாட்டுக்குச் சொந்தமானது?




பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
பாலு, உன்னாலே இப்படிக் கயிற்றின் மேலே நடக்க முடியுமா?
சாம்பியன் சர்க்கஸ்
கயிற்றில் நடக்கும் காரிகை
முயன்றால் முடியாதது ஒன்றுமில்லே. கயிறு உயரமாக இல்லாதிருந்தால் நடந்து பார்க்கலாம்.
இந்த உயரம் போதுமா? கீழே விழுந்தாக்கூடக் காயம் படாது. என்ன சொல்றே?
ஓகே! நான் நடந்து பார்க்கிறேன்.
இந்தா, என் தாத்தாவோட பழைய குடை. பாலன்ஸுக்குப் பிடிச்சுக்கோ.
ஹச்... அய்... இதென்னடாது?
தெரியல்லே? ஒட்டடை, புழுதி, தூசி இத்யாதி.... ஹா...ஹா...ஹா!
ரௌடிப் பசங்களா! இந்தக் குடையை நான் திறக்கணும், அதிலுள்ள ஹைதர் காலத்துத் தூசியும் புழுதியும் என் மேலே அபிஷேகம் ஆகணுங்கறதுக்காகத்தான் இப்படி ஒரு 'ஸ்டண்ட்' செய்தீங்களா? இருக்கட்டும்...


டேய், பாபு! அந்தப் பிளாஸ்டிக் தாலக் கூடையை எங்கே எடுத்துண்டு போறே? மறுபடியும் யாரோடயாவது வம்பு பண்ணிண்டு வராதே.
இல்லேம்மா...!
அந்த வால்களுக்குச் சரியான பாடங் காட்டத்தாம்.
சற்றைக்கெல்லாம்.
டேய், இப்ப வந்து பாருங்கடா. கயிற்று மேலே நடக்க நல்லாப் பழக்கிக்கிட்டேன்.
கண்ணைக் கட்டிக்கிட்டுக் கூட நடப்பேனாக்கும்!
பாபுப் பயலே மறுபடி மண்ணைக் கவ்வப் பண்ணலாமா? நம்ம அதிர்ஷ்டம் பாரு, வசதியாகக் கத்தியைக் கூடக் கிட்டேயே வச்சிருக்கான்.
இந்தக் கயிற்றை அறுத்து விட்டால் பயல் தடால்னு தலைகுப்புற விழுவான்.
ஹ...ஹ... வறார்!
நான் நெனச்சபடியே நடந்தது. தலைகுப்புற விழப் போறது நானில்லே தம்பி. உன் தலை மேலே விழுந்தது சுடு தண்ணி இல்லே கழுநீர்! எப்படி, ஜாலியா இருக்கா?
ஐயையோ! எங்க டிரெஸ்ஸெல்லாம் பாழாயிட்டுதே...
ஷவர் பாத் எப்படி? இங்கே வந்திங்கன்னா இப்படிக் கழுநீர் ஷவர் பாத் ஃப்ரீயாகக் கிடைக்கும். மறக்காம வாங்க.

வாழ்வே மென்மையின் உருவகம்



'க்ளிக்' அடித்துவைப்பீர்...நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III. மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்— நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.

தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லிவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை ரூ. 56.25 (எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).

SIMOES-AG-11-TAM




ஆக்பா க்ளிக்—இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.

®புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆண்ட்வெர்ப்/ லிவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.


டேபிள் டென்னிஸ் வீரர் ஜகந்நாத் பிலிப்ஸ் சைக்கிள் உதவியினால் உடல் வளத்தை தெம்புடன் வைத்திருக்கிறா



டேபிள் டென்னிஸ் பந்தயங்களில் ஜகந்நாத் மிகத் துடிப்புடன் விளையாடுகிறார். இந்தியாவின் தலை சிறந்த விளையாட்டு வீரர் ஜகந்நாத்துக்கு எப்பொழுதும் துடிப்புடன் இருப்பதன் அவசியம் தெரியும். தினசரி தன் பிலிப்ஸ் சைக்கிளில் சவாரி செய்வதன் மூலம் அவர் எப்போதும் தெம்புடன் செயல்படுகிறார். அதில் சந்தேகம் இல்லை. உலகப் புகழ்வாய்ந்த பிலிப்ஸ் ஊக்கமிகு வாலிபர்களுக்கு உகந்தது. கவர்ச்சியானது. அனாயாசமாய் சவாரி செய்ய வல்லது. காடு முரடான சவாரிக்கும் ஈடுகொடுக்க வல்லது.

கடுமையாக உழைத்து உங்களை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லும்.

ஊக்கமிகு வாலிபர்கள் உகந்து வாங்குவது பிலிப்ஸ் சைக்கிள்.



பிலிப்ஸ்

இந்தியாவில் தயாரிப்போர்:

டிஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா

அம்பத்தூர், சென்னை-53.

உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட்
பதிவுபெற்ற உபயோகிப்போர்.

'கோகுலம்'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' - அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்


camel
camel
'என் பிறந்த நாளுக்கா... அப்பா? எனக்கு ஒரு பாக்ஸ் கேமல் கலர்கள் வேண்டும்!'
அப்பா, ராஜுவிடம் கேமல் கலர் பாக்ஸ் ஒன்று இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அழகழகான படங்கள் வரைகிறான்... கலர்கள் எல்லாம் பளிச்சென்று, அழகாக இருக்கின்றன. அவை நெடுநாட்களுக்கு வருகின்றன என்றும் அவன் சொல்கிறான். அதனாலேதான் எனக்கும் பிறந்த நாளுக்கு கேமல் கலர் பாக்ஸ் வாங்கித் தாருங்கள் என்கிறேன். வாங்கித் தருவீர்களா அப்பா?
கேமல்
ஆர்ட் கலர்கள்
கேம்லின் பிரைவேட் லிட்.
ஆர்ட் மெடீரியல்ஸ் டிவிஷன்,
ஜே.பி. நகர்
அந்தேரி- குர்லா ரோடு,
பம்பாய்-59
PRATIBHA-70-4 TAM

REGISTERED NO. M. 9040